Registered as a News Paper பக்கங்கள் 12 விலை: ரூபா 6/-

Nallur Branch Library


# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 7 23-09-94 வெள்ளிக்கிழமை ஓசை 217


## ஐ. தே. கவின் சம்பள அறிவிப்பு மீளப்பெறப்படமாட்டாது

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசினால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அரச ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பான சுற்றறிக்கையின்படியே அரச ஊழியர்களின் சம்பளம் வழங்கப்படவுள்ளதாக கொழும்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன. இச் சுற்றறிக்கையினை புதிய அரசு மீளப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது உத்தியோக பூர்வமற்றதாக இருந்தது. பின்னர் இச் சுற்றறிக்கையை வாபஸ் பெறும் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது இதனை அடுத்து (12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச்சு நடத்த அரசு நால்வரை நியமிக்க முடிவு!

## விரைவில் யாழ். வரலாம் என தகவல்

[கொழும்பு]

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வைக் காண்பதற்கான ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்த அரசாங்கத்தால் நால்வர் கொண்டகுழு விரைவில் நியமனமாகலாம் என்றும், அவ்வாறு நியமனமாகும் குழு விரைவிலேயே யாழ். செல்லலாம் எனவும் கொழும்பில் இருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் தகவல் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவிக்கையில்; விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு அரசாங்கம் நான்கு பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரி (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் விரைவில் வெளிநாடு செல்வார்

(கொழும்பு)

உலக வங்கியின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் பிரதமர் சந்திரிகா மிக விரைவில் வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார் என தெரியவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசு (12ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை தாக்குதலால் ஒரு மீனவரை காணவில்லை

(குருநகர்)

கடற்படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் பூநகரி-காஞ்ச காட்டுப் பகுதியில் மீன் பிடியில் ஈடுபட்டு நின்ற குருநகர் மீனவர் ஒருவர் காணாமல்போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவருடன் கூடச் சென்ற மற்றும் மூவர் கடலில் குதித்து நீந்தியும் வேறு கடற்றொழில் வள்ளங்களின்உதவியுடனும் கரைவந்தனர்.

இச் சம்பவத்தில் குருநகர் மத்திய கிழக்கு வீதியைச் (12ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே

வடமராண பனை, தென்னை வள அ. கூ. சங்கங்கள், கொத்தணிகள், சமாசத்தினரால் வெளியிடப்படும். தியாகி லெப். கேணல் திலீபனின் உருவப் படம் இன்றைய வெள்ளி மஞ்சரியுடன் இணைக்கப் பட்டுள்ளது.

## புலிகளின் தாக்குதலில் இரு படையினர் பலி

அனுராதபுரம் மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் கண்காணிப்புப்படையைச்சேர்ந்த இருவர் பலியாகியதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இத் தாக்குதல் குறித்த மேலதிக விபரங்கள் அறியப் படவில்லை.

## மன்னார் கடற்பரப்பில் கடற்புலிகள் ஆதிக்கம்

### கொழும்பு பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

சிலாபத்துறை, மன்னார் கடற்பிரதேசங்களிலும் ஆழ்கடலிலும் கடற்புலிகள் ஆதிக்கம் செலுத்தி வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

கடற்புலிகள் சுதந்திரமாக இப் பகுதிகளில் ரோந்து (12 ஆம் பக்கம் பார்க்க

## சட்டத்தரணிமோதிலால்நேரு கொழும்பில் சுடப்பட்டார்

(கொழும்பு)

முன்னாள் இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவர்களில் ஒருவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான மோதிலால் நேரு நேற்று முன்தினம் கொழும்பில் பம்பலப்பிட்டியில்வைத்து இனம் தெரியாத நபர்களினால் சுடப்பட்டுள்ளார்.

தற்போது மிகவும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார் இவர் அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கலந்துரையாடல்

சகல திணைக்களத் தலைவர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று முற்பகல் 10.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். அச்சமயம் சகல திணைக்களத் தலைவர்களையும் கலந்துகொள்ளுமாறு, தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர்கேட்டுள்ளார்.

## யாழ். கடல் நீரேரித் தடையை நீக்க அரசாங்கம் முயற்சி

[கொழும்பு]

யாழ் குடாநாட்டு மக்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் சென்று வருவதற்கென பயன்படுத்துவதற்காக கிளாலி கடல்நீர் ஏரி பகுதி மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்காக புதிய அரசாங்கம் தன்னால் ஆன முயற்சியை மேற்கொண்டுவருவதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை அரசாங்கத்தினால் கொண்டு செல்லப்படும் சமாதான முயற்சிகளை எந்த கட்டத்திலும் இடைநிறுத்தப் போவதில்லை என்றும் தொடர்ந்து இதனை முன்னெடுத்துப் போவதாக அவ் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மக்களை சோதனையிட காத்திருந்த இராணுவம் மீது புலிகள் தாக்குதல்

### மூன்று படையினர் பலி; ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

(திருமலை)

திருமலை மாவட்டம் பள்ளிக்குடியிருப்பு சிறிலங்கா இராணுவ முகாம் அருகே பயணிகள் மீது சோதனையிடக் காத்திருந்த சிறிலங்கா இராணுவத்தினர்மீது மாட்டு வண்டிலில்சென்ற விடுதலைப் புலிகள் நடத்திய துணிகர கொமாண்டோ தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப் பட்டனர். இவர்களது ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் நண்பகல் 12 35 மணியளவில் விடுதலைப் புலிகள் இத்துணிகரத் தாக்குதலை மேற்கொண்டனர். சுமார் ஐந்து நிமிடங்கள் நடாத்தப்பட்ட இத்தாக்குதலின் போது முகாமிலிருந்து சுமார்300 யார் தொலைவில் நின்ற படையினரே கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பியோடிவிட்டனர்.

இத்தாக்குதலின் போது புலிகள் தரப்பில் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை.

இத் தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்க (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகா தெரிவானார்

சிறிலங்காவில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் திருமதி சந்திரிகா குமாரதுங்கா போட்டியிடுவார் என தகவல் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று கொழும்பில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

## தியாகி திலீபன் நினைவாக வட்டரீதியில் சிரமதானங்கள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவாக நேற்று யாழ் குடாநாடெங்கும் வட்ட ரீதியாக சிரமதானங்கள் நடைபெற்றன

வலிகாமம் கோட்டத்திலும், தீவகக் கோட்டத்திலும், வடமராட்சி கோட்டத்திலும், தென்மராட்சி கோட்டத்திலும் வட்ட ரீதியாக நடைபெற்ற இந்த சிரமதான நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளில்ஒவ்வொரு தினமும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தி, அவரின் தியாகத்தை விளக்கும் கவிதை, பேச்சு என்பன இடம் பெறுகின்றன.

வட்டரீதியாக நடைபெறும் நிகழ்வுகளில் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இந்த நாட்களில் வீதிகள் [12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**பாலர் ஆசிரியராகலாம்...**
கடைசித்தகைமை க.பொ.த. (சா/த) சனி,ஞாயிறு வர முடியாதோர் தபால் வழியி லும் பயிலலாம். விரைவில் ஆரம்பம். பாலர் ஆசிரியர் சங்கம், 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (9449)

**தேவை**
நடனமுருகன் வைத்திய நிலையத்தில் தாதியாக கடமையாற்றக்கூடிய, பெண்பிள்ளை ஒருவர் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. நடனமுருகன் வைத்திய நிலையம், சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம். (9481)

**பிரிமா புறொயிலர் குஞ்சுகள்**
10 நாட்கள் வளர்ச்சியடைந்த பிரிமா புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு தொடர்பு:- சி. குலசிங்கம் இல. 9, றக்கா வீதி,(BARக்குமுன்பாக) யாழ்ப்பாணம். (9478)

**தவறிவிட்டது**
20-09-1994 அன்று நாவலர் வீதியில் இருந்து ஐந்து சந்திக்கிடையில் பச்சை பாக் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. அதனைக் கண்டு எடுத்தவர்கள் ஈழநாத காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (9485]

**நாளைய சந்ததிக்கான இன்றைய இலக்கியம்**
''ஒரு பிடிமண்'' விற்பனையாகின்றது கே.ஆர்.டேவிற் எழுதிய இம்மண்ணின் கதைகள் ... மலையிலிருந்து ஒலிக்கும் மணியோசையாய் உங்களை உசுப்பும்... பூபாலசிங்கம் வசந்தம் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம் [9471]

**மணிக்கூடுகள் தேவை**
பழைய BIG BEN மேசை மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். கமலா வாச் வேக்ஸ் உரிமையாளர் தேவதாஸன் (காளிகோவில் முன்பாக-மேல்மாடி) 113.கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம். (9492

**1995 இன் பெண் அரசுத்தலைவிகள்**
(மகரராசி) சந்திரிகாமுதற் பெண் ஜனாதிபதியாகவும், (சிங்கராசி) ஜெயலலிதா மீண்டும் தமிழக முதல்வராகவும், 5 வருடங்களுக்குமேலும், (கன்னிராசி) ஸ்ரீமாவோ இலங்கையிலும், பெனாசீர் பூட்டோ பாகிஸ்தானிலும், பேகம்காலிஸினியா பங்களாதேசிலும், 1995 வரையும், பிரியங்கா காந்தி 2000 ஆண்டளவில்இந்தியாவிலும், பிரதமர்களாவர். (சத்யா - கட்டுடை) (9493)

**சகலகலாவல்லிமாலை**
''சொல்விற்பனமும், அவதானமும்,கல்வி சொல்லவல்ல நல்வித்தையும் தந்தடிமை கொள்ள'' சகலகலாவல்லி மாலை பாராயணம். 10 மில்க்வைற் சோப் மேலுறைகள்/ மில்க்வைற் சலவைத்தூள் வெற்றுப்பக்கற்றுகள் தந்து பிரதியொன்று பெற்றுக் கொள்ளலாம். 'மில்க்வைற்' (சி-10391)

## பிறந்த நாள் வாழ்த்து

23 09-1994



### செல்வன் கிரிசாந்

சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த ஸ்ரீ கிருஸ்ணா மில் உரிமையாளர் ஸ்ரீ விஜயக்குமார் - சியாமளா தம்பதிகளின் செல்வப்புதல்வன் கிரிசாந் தனது ஐந்தாவது பிறந்தநாளை இன்று (23-09-94) வெகுவிமரிசையாக தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா தம்பி வினோசாந் அப்பம்மா, அம்மம்மா, அம்மய்யாமார், சிறுப்பிட்டி மாமா, மாமி,மச்சான்,மச்சாள்மார்சுவிஸ் மாமா, ஜேர்மன் சித்தி சித்தப்பா, தங்கை நிவேதா சிறுப்பிட்டி பிரியா சித்தி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சிறுப்பிட்டி செல்லப்பிள்ளையார் அருளால் சகலகலைகளையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(9494)

## 2-ம் லெப். மாலதி

### நினைவார்த்த கட்டுரைப் போட்டி

விபரங்களை 1994. 09. 09 ஈழநாதத்தில் பார்க்கவும்.

(சி-10340)

## ஆறாண்டு நீங்கா நினைவுகள்



**செல்வன் சகாதேவன் செல்வகுமார்(கீதன்)**

பிறப்பு:- 9-11-1967 திதி:23-09-1994 இறப்பு:- 29-9-1988

மறுபிறவிதனில் ஒன்று கூடி வாழ வேண்டும் என்று கடவுளை வேண்டுகின்றோம்.

அன்பு அம்மா, அப்பா,
அண்ணா: கண்ணன், ராதா
அக்கா ஜெயா
தம்பி சூட்டி

நல்லூர் கீதன் சூட்டி
மோட்டார் சயிக்கிள் பழுது பார்ப்பவர்
இராமலிங்கம் வீதி
(9495) தந்தை- அ. சகாதேவன்

## நினைவு கூருகின்றோம்...

### 23-09-1994

1985-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-ஆரையம்பதிப் பகுதியில் சிறிலங்கா இரகசிய காவல்துறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**பாண்டியன்** (முத்தன் நல்லதம்பி-அம்பிளாந்துறை, தாழங்குடா-மட்டு)

1986-ம் ஆண்டு திருமலை-கும்புறுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விமானக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய,

**ஐயா** (- - கும்புறுப்பிட்டி-திருமலை)

1987-ம் ஆண்டு உண்ணாவிரதம் இருந்த திலீபன் கோரிக்கையை வலியுறுத்தி மன்னார் எழுத்தூரில் இருந்து இந்தியப்படைமுகாமிற்கு மகசர் கொடுக்கச் சென்ற சமயம் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**யோகன்** (சவரிப்பிள்ளை யோகரத்தினம்-இத்திக்கண்டல், அடம்பன்-மன்னார்)

1988-ம் ஆண்டு வவுனியா-கல்மடுவில் சுகயீனம் காரணமாக எமைப் பிரிந்த,

**றொயிஸ்** (குகராசா சரவணபவன்-மூன்றுமுறிப்பு-வவுனியா)

1989-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,

**ரஞ்சன்** (க. சத்தியசீலன் - வாழைச்சேனை-மட்டு)

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் தலைகள் கொய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டு பின் முண்டங்களாக மீட்கப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**தர்மகுலேந்திரன்** (இயக்கச்சி)
**நமசிவாயம் தெய்வேந்திரன்** (வேலணை)
**நாகநாதன் பாலேந்திரா** (இராஜேந்திரா வீதி யாழ்.)

1990-ம் ஆண்டு மட்டு-மியாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சோழன்** (- - ஐயங்கேணி, ஏறாவூர்-மட்டு)

யாழ்-வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணை தாக்குதலின் போது விழுப்புண்ணடைந்திருந்து சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய,

**மொசாட் - காந்தன்** (மகேந்திரராஜா ஜெயகாந்தன்-2-ம் வட்டாரம்-புதுக்குடியிருப்பு)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் நிவாஸ்** (குமாரசாமி கணேஷ்-கொம்மாந்துறை-மட்டு)
**ரமணிதரன்** (- - மட்டு)
**லெப். கேணல் சந்திரன்** (இராமலிங்கம் முத்துலிங்கம்-4-ம் வாய்க்கால் - கிளிநொச்சி)
**கடற்புலி மேஜர் வின்சன் - ஜப்பான்**
நவரத்தினம் வசந்தன்-நுணுவிலடி-வல்வெட்டித்துறை
**மேஜர் அரவிந்தன்** (சிவலிங்கம் தவானந்தராசா -ஊறணிகுடியேற்றம், பொலிகண்டி-யாழ்)
**நரேன்** (இரத்தினசிங்கம் தங்கரூபன்-இன்பருட்டி, அல்வாய்வடமத்தி-பருத்தித்துறை)
**நுட்வின்** [ - - - ]
**அலிப் லூயிஸ்பொனிபஸ் அன்ரன்டென்சில்** (ராஜா)
**சைமன்** ( - - - - )
**கோமேஸ்** ( - - - - )

1991-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ரஜந்தன்** (ஆறுமுகம் செல்வரட்ணம் - வட்டுவாகல் முல்லைத்தீவு)
**கப்டன் குபேரன்** (இராமச்சந்திரன் தர்மராசா-விநாயகபுரம்-துணுக்காய்)
**2-ம் லெப். மனோஜ்** (இரத்தினம் சிவகுமார்-பன்றிக்கெய்தகுளம்-ஓமந்தை)
**2 -ம் லெப். றெஜினோல்ட்** (இராமலிங்கம் பத்மராசா-குமரபுரம்-பரந்தன்)
**லெப். விவேக்** (மார்க்கண்டு மகேந்திரன்-கரவெட்டி மத்தி-யாழ்)
**2-ம் லெப். ரூபி** (செல்வராணி தம்பையா-வரணி, கொடிகாமம்-யாழ்)
**மலேசிமன்** (இராஜேந்திரம் திவாகரன்-கரணவாய் மேற்கு,கரவெட்டி-யாழ்)

1993-ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த,

**கப்டன் ஆரமுதன் - நிரேஸ்** (குலவீரசிங்கம் தேவபாலன்-மீசாலை தெற்கு-மீசாலை சாவகச்சேரி)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்;

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10387)

# 'சாகரவர்த்தனா' போர்க் கப்பல் மூழ்கடிப்பு; ராணுவ-அரசியல் யதார்த்தத்தின் வெளிப்பாடு

சிறிலங்காவின் போர்க்கப்பலான 'சாகரவர்த்தனா' - கடலரசன்- கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டமையானது கடற்புலிகளின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும். இத்தாக்குதல் மூலம் கடற்படை அணிகளைக் கொண்ட உலக விடுதலை அமைப்புக்களில் தாங்கள் முதன்மையானவர்கள் என்பதை மீண்டும் ஒரு முறை எந்தவித சந்தேகமுமின்றி கடற்புலிகள் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

குறுகிய கால வளர்ச்சியில் கடற்புலிகள் பெற்றுள்ள இவ் வெற்றியானது கடற்போரில் தலைவர் பிரபாகரன் கொண்டுள்ள போர் அறிவுக்கும், மதிநுட்பத்திற்கும் எடுத்துக்காட்டாக இருக்கும் அதேவேளை, கடற்புலிகளின் விசேட தளபதி சூசையின் செயற்பாட்டிற்கும், கடற்புலிகளின் துணிவிற்கும், ஆற்றலுக்கும் சிறந்த சான்றுமாகும்.

கடற்படைக் கப்பலின் இம் மூழ்கடிப்பானது, இரண்டாம் ஈழப்போரில் விடுதலைப் புலிகள் சாதித்த இராணுவ வெற்றிகளுடன் மேலதிகமான ஒன்றாக இணைத்துக் கொள்ளப்படினும், இன்றைய சூழ்நிலையில் அதன் இராணுவ அரசியற் பரிணாமம் வேறுபாடானதும், முக்கியமானதுமாகும்.

## இராணுவ முக்கியத்துவம்

'சாகரவர்த்தனா' மூழ்கடிக்கப்பட்டது இராணுவரீதியில் இரு பெரும் முக்கியமான அம்சங்களைக் கொண்டதாகும் ஒன்று, ஓர் போர்க்கப்பல் வழிமடக்கித் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டதென்ற வகையில் ஆகும். இரண்டாவது, கடற்புலிகளின் நடவடிக்கை இலங்கையின் மேற்குக் கரையோரத்தில் கற்பிட்டி கரையோரம் வரையும் விஸ்தரிக்கப்பட்டுள்ளமையாகும்;

கடற்புலிகள் ஏற்கனவே கடற்படையினரின் பல்வேறு வகையான படகுகள், கப்பல்கள் என்பனவற்றின் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதில் கரையோர ரோந்துப்படகுகள், நீருந்து விசைப் படகுகள், சுப்பர் டோறா படகுகள், கட்டளைத் தாய்க்கப்பல்கள் என்பன பலசிக்கியுள்ளன. இதில் மூழ்கடிக்கப்பட்டவையும் கைப்பற்றப்பட்டவையும் உண்டு. இருப்பினும் 'சாகரவர்த்தனா' கப்பலின் மீது கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது வேறு ஒரு வகையில் முக்கியம் பெறுவதாகவே உள்ளது.

அதாவது முன்னர் கடற்புலிகள் தாக்கிய தாக்கி அழித்த கப்பல்கள் யாவற்றையும் விட இக்கப்பலானது போர்வலு கூடியதாகும். 330 தொன் எடையுள்ள இக்கப்பலானது, சிறிலங்கா கடற்படையிடம் உள்ள முன்னணிப்போர்க்கப்பலில்ஒன்றாகும் ஒரு கொமாண்டர் தலைமையில் இயங்கும் 52 கடற்படையினரைக் கொண்டதாகும். இரட்டைப் பீரங்கிகள் இரண்டு பொருத்தப்பட்டதுமான இக்கப்பல் தாக்குதல் வலுவும் கூடியதாகும் அத்தோடு இக்கப்பலானது தனது கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் தாக்கப்பட்டது அடுத்த முக்கியமான அம்சமாகும்;


இத்தாக்குதலானது, கடற்புலிகள் குறுகிய காலத்தில் உறுதியோடு வளர்ந்திருப்பதை தெளிவாக வெளிப்படுத்துகின்றது. இதே சமயம், கடற்புலிகள் இத்தாக்குதல் மூலம், கடற்போரில் தமது போர் வடிவத்தை செழுமைப்படுத்தியுள்ளதும் தெரிய வருகின்றது.

கிளாலிக் கடலின் ஆதிக்கம் யாருக்கு என்ற நிலையில், சிறிலங்கா கடற்படையினருடன் நேருக்கு நேர் மோதத் தொடங்கிய கடற்புலிகள் இக்கடற்பரப்பில் சிறிலங்காவின் சிறிய அதிவேக நீருந்து விசைப்படகுகளை வழிமடக்கித் தாக்கி மூழ்கடிக்கும் போர் யுக்திகளை கையாண்டனர். இப் போர்யுக்தியின் ஓர் உயர்ந்த கட்ட நிலையே இன்று ஆழ்கடல் ரோந்துப்பணியில் ஈடுபடும் போர்க்கப்பலான 'சாகரவர்த்தனாவின்' மூழ்கடிப்பாகும்;

இந் நிலையானது சிறிலங்கா கடற்படையின் பாவனையில் உள்ள எந்த வகையான போர்க்கப்பலையும். கடற்புலிகள் எதிர் கொள்ளத்தயாராகவுள்ளனர் என்பதன் வெளிப்பாடே ஆகும் இந்த வகையில் சாகரவர்த்தனாவின் மூழ்கடிப்பானது சிறிலங்காவின் கடற்படையை பொறுத்து அச்சம் ஊட்டும் ஒரு அம்சம் என்பதில் சந்தேகமில்லை

## கடலாதிக்க விஸ்தரிப்பு

இரண்டாவதாக சாகரவர்த்தனா போர்க்கப்பல் மூழ்கடிப்பானது கடற்புலிகளின் நடவடிக்கை எல்லையை இலங்கையின்மேற்குக் கரையில் கற்பிட்டிவரையில்கொண்டு சென்றுள்ளது. ஏற்கனவே கடற்புலிகளின் நடமாட்டம் கற்பிட்டிக் கடற்பரப்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு வந்திருப்பினும், இத்தாக்குதலே கற்பிட்டிக் கடற்பரப்பில் கடற்புலிகள் மேற்கொண்ட பெரிய நடவடிக்கையும், கடற்படைக்கு பாரிய சேதத்தை விளைவித்த தாக்குதலுமாகும். சுருக்கமாகக் கூறுவதானால் இத்தாக்குதலானது வடக்குப் பகுதியில் இருந்து மேற்கு கரையின் மையப் பகுதிவரை விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை / ஆதிக்கத்தை விஸ்தரித்துள்ளதெனலாம்.



தமிழீழத் தேசியத் தலைவருடன் கடற் புலிகளின் விசேட தளபதி சூசை.

இந்த வகையில் இத்தாக்குதலானது, வடக்கிற்கு அடுத்ததாக கடற்புலிகளின் ஆதிக்கம் மேற்குக் கடற்பரப்பில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிப்பதாகவே உள்ளது.

## அரசியல் முதன்மை

இவ்வாறாக இராணுவ ரீதியில் 'சாகரவர்த்தனா' மூழ்கடிக்கப்பட்டமையானது பெரிதும் முதன்மை பெறுவது போன்றே. அரசியல் ரீதியிலும் அதன் முக்கியத்துவம் உள்ளது இதில் முக்கியமாக இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கு முற்படும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இன்றைய இராணுவ, அரசியல் யதார்த்த நிலையை மிகவும் தெளிவாக உணர்த்தியிருக்கப் போதுமானதாகும்.

ஏனெனில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம். இனப்பிரச்சினை விடயத்தில், அரசியற் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் எனக் கூறிவந்த பொழுதும், இராணுவத்தின் அழுத்தத்திற்கு அது உட்பட்டே வந்தது. இதனால் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி தெளிவான நிலைப்பாடு எதையும் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை.

ஆனால் இராணுவத்தின் அழுத்தத்திற்கு உட்பட்டோ அன்றி, இராணுவத்தின் சிந்தனையையோ, விளக்கத்தையோ ஏற்றுக்கொண்டோ, அரசாங்கம் கடந்த ஒருமாத காலத்தில் யுத்தநிறுத்தம் பற்றிப் பேசவில்லை. இராணுவமும் யுத்தநிறுத்தமோ அன்றி இன்றைய நிலைகளில் இருந்து ஒரு அங்குலம் தானுமோ பின்வாங்காமல் அரசாங்கம் பேச்சுவார்த்தையிலோ அன்றிச் சமாதானத்திலோ ஈடுபடுவதானால் ஈடுபடட்டும் என்ற நிலையிலேயே இருந்தது.

ஆனால், இராணுவம் தனது இந் நிலைப்பாட்டிற்கு, கற்பிக்க முனைந்த காரணமானது, இன்று மேற்கொள்ளப்படும் யுத்த நிறுத்தம் ஒன்று பலவீனப்பட்டுப்போயுள்ள விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னை மீண்டும் சீரமைத்துக்கொள்ளவும், பலப்படுத்திக்கொள்ளவும் ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதாகவே இருந்தது. இந் நிலைப்பாடு, அரசியல் இராணுவ யதார்த்தத்திற்குப் புறம்பானதாக இருப்பினும் அரசாங்கத்தரப்பு இதற்கு ஓரளவு செவிசாய்த்தது என்றே கருதுவதற்கு இடமுண்டு.

இதை ஒத்தது போன்றதொரு சிந்தனைப்பாடே கடந்த அரசாங்கத்திடமும் இருந்தது. இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் தீர்வு காணலாம் என்ற விடுதலைப்புலிகளின் அறிவிப்பு அவர்களின் பலவீனம் என்றே கருதப்பட்டது. இதேபோன்றே புதிய அரசிற்கு விடுதலைப்புலிகள் நீட்டிய நட்புக்கரம் பலவீனத்தின் பால் எழுந்தது என கருதியிருப்பினும் ஆச்சரியமில்லை.

ஏனெனில், பேச்சுவார்த்தை சமாதானத்தீர்வு என்பன குறித்து அறிவித்த அரசாங்கம், போர் நிறுத்தத்தை வற்புறுத்தத் தவறியதோடு இராணுவம் மேற்கொண்ட இராணுநடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் தவறியது. இந்நிலையானது அரசாங்கம் விடுத்த நல்லெண்ண சமிக்கைகளை விட இராணுவம் மேற்கொண்ட தாக்குதல் தமிழ் மக்கள் தரப்பிலும், விடுதலைப் புலிகள் தரப்பிலும் பெரும் பாதிப்பு விளைவிப்பதாகவே இருந்தன.

இவ்வாறானதொரு நிலையில், சமாதானத்திற்கான சுமுக சூழ்நிலை உருவாவது கடினமான காரியமே, ஆனால் அரசாங்கம் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. மாறாக இராணுவத்தின் செயற்பாடுகள் தொடரும் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உறுதி வழங்கினார், இந்நிலையில். அரசாங்கத்தின் நிலைப்பாடு தமிழ்மக்களின் மீதான இராணுவ அழுத்தத்தை முன்னைய அரசு போன்று இல்லாதுவிடினும் அதைவிட சற்றுக் குறைந்த விகிதத்தில் அனுமதிப்பதாகவே இருந்தது.

இவ்வாறு கருதுவதற்கு தனியாக ஊகம் மட்டும் காரணமல்ல. இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கு முடியாது விட்டால் அதாவது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைக்கும் தீர்வுத் திட்டம் ஒன்றை விடுதலைப் புலிகள் நிராகரித்தால் அதன் பின்னர் இராணுவ நடவடிக்கை மேற்கொள்வது என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் ஏற்கனவே கொண்டுள்ளது. இதனை பிரதம மந்திரியும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமே வெளிப்படுத்தியும் இருந்தனர்.

இந்தவகையில் இராணுவத்தினரின் விட்டுக்கொடுக்காமைஎன்பதுஅரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கும்ஒருவகையில் ஏற்புடையதென்றேகூறலாம். இது ஒரு வகையில் புலிகள் மீதான அரசியல் அழுத்தத்திற்கு உதவக்கூடும் என்றும் அரசாங்கம் கருதியிருக்கவும் கூடும்.

ஆனால் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு தான் காணமுடியும் என்ற நிலைப்பாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் தெளிவாக இருந்த அதேவேளை, இராணுவ ரீதியான அழுத்தத்திற்கு எப்பொழுதும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்பதிலும் உறுதியாகவே இருந்தது.

இதன் காரணமாகவே இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் தனது தெளிவான நிலைப்பாட்டை வெளியிட்ட அதேவேளை அதற்கான ஓர் நல்லெண்ண சமாதானசூழ்நிலையை உருவாக்கவேண்டியதன் அவசியத்தையும் வெளியிட்டே வந்தது.

இறுதியாக, தலைவர் பிரபாகரன் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் இவ்விடயம் தெளிவாகச் சுட்டிக் காட்டப் பட்டது. போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டியதற்கான காரணத்தையும் அவர் கூறியிருந்தார். அவர் போர் நிறுத்தத்திற்குக் காரணம் உண்மையான சமாதானச் சூழ்நிலையை உருவாக்குவதற்கே அன்றி வேறொன்றுமல்ல. போர் நிறுத்தம் செய்யப்படாத நிலையில் திடீரென எதிர்பாராத வகையில் மோதல்கள் நிகழலாம். உயிர்ச் சேதங்கள் ஏற்படலாம். இந்த நிகழ்வுகள் இடம் பெறும் போது அவை சமாதான சூழலையும் பேச்சுக்களையும் பாதிக்கும் எனச் சுட்டிக் காட்டியிருந்தார்.

இக்கூற்றை நிதர்சனப்படுத்துவது போன்றே, சிறிலங்கா இராணுவத்தினரும், கடற்படையினரும் மேற்கொண்ட தொடர்ச்சியான தாக்குதல்களுக்குப் பதிலடி போன்றோ, அன்றி புலிகளின் வழமையான நடவடிக்கைக்கு ஏற்பவோ பலமான தாக்குதல் ஒன்று புலிகளால் நடத்தப்பட்டுள்ளது.

இது எவ்வாறாக இருப்பினும் இத்தாக்குதலானது, புதிய பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இன்றைய இராணுவ, அரசியல் யதார்த்த நிலையைப் புரிந்துகொள்ள பெரும் உதவியாக இருந்திருக்கும். இதில் முக்கியமாக புலிகளின் இரா

**ஜெயராஜ்**

ணுவ பலம் பற்றியது. மற்றையது அரசியற் தீர்விற்கும் போர் நிறுத்தத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு இவ் யதார்த்தத்தை அரசாங்கம் இத்துடனாவது சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தவின் 'கற்பிட்டி கடலில் கடற்படைக் கப்பல் கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டபோதிலும்புதிய அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் தொடரும். என்றஅறிவிப்புஅரசியற் சூழ்நிலையை அவர் சரியாக விளங்கிக் கொண்டுள்ளதைக் காட்டுவதாக இருப்பினும், இராணுவம்தொடர்பானஅவர்களின் அடுத்தகட்டநடவடிக்கையே இனப்பிரச்சினைக்கானஅரசியற்தீர்வு குறித்த முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும்.

# அரசியல் வாழ்வின் முக்கிய கட்டம்; தீர்மானமும் திசையும் தொண்டா கையில்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் இணையப் போவதாகவும் இது எந்த ஓர் நிபந்தனையும் அற்ற ஒத்துழைப்பாக இருக்கும் எனவும் அதன் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அடிக்கடி அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றபோதும்பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கம் இது தொடர்பாக எந்த ஒரு தகவலையோ அன்றி சமிக்கையையோ காட்டாது மௌனமாக இருந்து தொண்டமானின் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வருகின்றது.

## ஐ. தே. க - தொண்டா உறவு

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தொண்டமானுக்கும் இடையேயரன உறவுநிலையானது இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டதல்ல. அதாவது 1966-ம் ஆண்டு தொடக்கம் இவ்விரு கட்சிகளும் ஒன்றிணைந்து ஆட்சியிலும் சரி, எதிர்க்கட்சியிலிருந்தும் சரி வேலை நிறுத்தம்மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான தொழிற்சங்க ரீதியான போராட்டங்களை நடத்தி ஐ. தே. க. தவிர்ந்த ஏனைய அரசாங்கங்களை உலுப்பியது. இ- தொ- காவின் இத்தகைய நடவடிக்கைகளினால் மலையக தமிழ்த் தோட்டத் தொழிலாளர் அரசியல் ரீதியாகப் பல இன்னல்களை அனுபவிக்க நேர்ந்தது இங்கு குறிப்பிடத்தக்கது-

ஆகவே இன்று தொண்டமான் ஐ- தே- கவை விட்டு ஒருதலைப்பட்சமாக பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஒத்துழைப்பு நல்க முன்வந்தமை சற்று மாறுபட்டதோர் நிலைப்பாடேயாகும். இந்நடவடிக்கை பலத்த சந்தேகத்தையும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் ஓர் பலப்பரீட்சையைத் தோற்றுவிக்கக் கூடியதாகும்-

## மலையகத்தில் புதிய சக்தியின் வளர்ச்சி

மலையகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளில் தனது கட்சியைத் தவிர்ந்த வேறு ஒருவரான சந்திரசேகருக்கு பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டிருப்பதால் அவர் தனது அரசியல் செல்வாக்கை மேலும் வளர்க்க வாய்ப்பு உருவாகியுள்ளது- இதன் மூலம் மலையகத்தில் தனது செல்வாக்கு கேள்விக்குறியாகிவிடும் என்ற எதிர்பார்ப்பினால் நாளாந்தம் பத்திரிகைக்குப்பத்திரிகை, தான் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து செயலாற்றப் போவதாகத் தெரிவித்து வருகின்றார்-

மலையகத்தைப் பொறுத்த மட்டில் இன்று மலையக ஐக்கிய முன்னணியின் கை ஓங்கி வருவது ஒரு புதிய அரசியல் சூழ்நிலையாகும்- 1993ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலின்போது 16,085 வாக்குகளை நுவரேலியா மாவட்டத்தில் பெற்றுக் கொண்ட அக்கட்சி 1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 27,374 வாக்குகளைப் பெற்றுக் கொண்டமை இக்கட்சி சுமார் ஒரு வருட காலத்தில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளை மேலதிகமாகப் பெற்றுக் கொண்டதைக் காட்டுகிறது- எனவே இந்த நிலை தொடர்ந்து நீடித்தால்தனதுஏகபோகத் தலைமைத்துவத்திற்கு ஆபத்து வரும் என்பதுஒருபுறமும், மறுபுறம் இ- தொ- காவிலிருந்து விலகிய எம்- எஸ்- செல்லச்சாமி பொ- ஐ- முன்னணியுடன்இருப்பதோடு புதிய தொழிற்சங்கம் ஒன்றை உருவாக்கியிருப்பது நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும் என்ற எண்ணத்தினாலுமே தொண்டமான் இவ்வாறாக ஒருதலைப்பட்சமான இணைப்புப் பற்றி அறிக்கைகளை விட்டுவிடுவதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

கடந்த பொதுத்தேர்தலின் போது ஐ. தே. க தோட்டத் தொழிலாளர்களின் ஆபத்பாந்தவனாக இருந்து வருகின்றது என பிரசார மேடைகளில் உரத்து முழங்கிய தொண்டமான் இன்று சுருதி மாற்றி ஐ. தே. க. பெரிதாக என்ன சாதித்தது என்று கேள்வி எழுப்புவது அவரது அரசியற் தடுமாற்றத்தின் வெளிப்பாடே யாகும்.

> தொண்டமானின் நடத்தையில் எனக்கு பூரண நம்பிக்கையுண்டு. அவர் பேச்சு கருங்கல்லின் மீது எழுதிய எழுத்து. அவர் எடுத்த தீர்மானத்தை நிறைவேற்றியே தீருவார். இதில் எந்த வித சந்தேகமும் எனக்கு இல்லை.
>
> - காமினி திசாநாயக்கா

## பிரிந்துசெல்லும் உறவு

ஐ. தே- . கட்சியைப் பொறுத்தமட்டில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அதன் தயாராக்கலில் தொண்டமானின் இழப்பு அதன் வாக்கு வங்கியில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும். தொண்டமானைத்தக்க வைத்துக் கொள்ள காமினி திசாநாயக்கா, ''தொண்டா எம்மை விட்டுப்போக மாட்டார் அப்படிப் போனால் அது அவருக்கு ஆபத்தான அரசியல் சூழ்நிலையைத் தரும்'' என்று மிரட்டும் பாணியில் பேசியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தொண்டமான் இல்லாவிட்டாலும் வெற்றி நிச்சயம் என காமினி கூறிவந்தாலும் அவரது உள்மனம் உண்மையை அவருக்கு சுட்டிக்காட்டவே செய்யும்.

பாராளுமன்றத்தில் ஐ. தே. க. வின் உறுப்பினர்களாகவுள்ள தொண்டமானும் அவரது ஐந்து சகாக்களும் ஐ.தே. கவிலிருந்து வரும் பொதுச் செயலாளரின் அறிவிப்பின் மூலம் எந்த நேரமும் பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்து விடும் சந்தர்ப்பமும் உண்டு. எனவே அரசனை நம்பி புருஷனைக் கைவிடுவாரா தொண்டமான் என்பது அவரது நடவடிக்கைகளைப் பொறுத்ததே.

இன்னொரு நிலையில் தலைவர் தொண்டமானின் தளபதி எனக் கூறப்பட்ட செல்லச்சாமியே விலகி விட்ட சூழ்நிலையில் இ. தொ.காவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்தளவிற்கு தன்னுடன் ஒத்துழைப்பார்கள் என்ற கவலையும் தொண்டமானுக்குஉண்டு ஏற்கனவே மத்தியமாகாண முதலமைச்சர் டபிள்யூ பீ.பீ. திசாநாயக்காமீது அம்மாகாணசபையின்எதிர்க் கட்சியில் இருந்தகாமினி திசாநாயக்காவினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தொண்டமான் தலைமையில் ஓர்அணி ஆதரித்தமையும் இ.தொ.காபொதுச் செயலாளராகஇருந்த எம்எஸ் செல்லச்சாமியின் தலைமையில் இன்னொருகுழு டபிள்யூ பீ.பீ.திசாநாயக்காவை ஆதரித்தமையினால் இ. தொ. கா பிளவுபட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யாருக்கு எதிராக யார் நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை கொண்டுவர எத்தனித்தார்களோ, அவர்கள் கடைசியில் ஒன்றிணைந்தார்கள் இவ்அரசியல் விளையாட்டில் இ.தொ.காபலவீனப்பட்டதே எஞ்சியிருந்தது

இதேபோன்ற நிலையே இன்னும் ஏற்படும்போல் தெரிகின்றது. பாராளுமன்றத்திலிருந்து நீக்கப்படும் நிலை தோன்றுமானால் தொண்டமானுக்கு விசுவாசமாக இவர்களில் எத்தனைபேர் செயலாற்றுவார்கள் என்பது கேள்விக்குறியே. இதனால் மீண்டும் ஓர் பிளவு இ.தொ.காவில் ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை

**நிமலராஜன்**

## தொண்டா அறிவிப்பின் பின்னணியில் சதி?

இதேவேளை தற்போது ஐ. தே. க தலைமைப் பொறுப்பினை மறைமுகமாக வகிக்கும் காமினி திசாநாயக்காவுக்கும் தொண்டமானுக்கும் இடையே பல வழிகளில் மிகவும் நெருங்கிய தொடர்பு இருப்பது குறிப்பிடத்தக்கது. இருவரும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது மட்டுமின்றி, 1977ம் ஆண்டு நுவரெலியா மஸ்கெலியா மூன்று அங்கத்தவர்கள் தொகுதியில் போட்டியிட்டு காமினி, முதலிடத்திலும் தொண்டா மூன்றாம் இடத்தில் வருமளவிற்கு பரவலாக ஆதரவைப் பெற்றிருந்தவர்கள்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவின் நலன் விரும்பிகள் இவர்கள். இருவரும் தமக்கேற்பட்ட எந்த நன்மை தீமைகளையும் இந்தியாவுடன் கலந்தாலோசனை மேற்கொண்டே நடைமுறைப்படுத்துவதோ அன்றி பரிகாரம் காண முற்படுவதோ குறிப்பிடத்தக்கது. பிரச்சினைகள் தோன்றும் போதெல்லாம் இந்திய தூதுவராலயத்திற்கும் இவர்கள் அடிக்கடி சென்று வருவதும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படும் முக்கிய விடயமாகும்.



தற்போது காமினி திசாநாயக்காவுக்கு கிடைத்த எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட தொண்டமானின் கணிசமான செல்வாக்கினால் பெறப்பட்ட ஒன்றாகும். அதாவது தொண்டமான் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவில் தான் கலந்து கொள்ளாத போதும் மலையகத்தில் தெரிவான சில உறுப்பினர்களுக்கூடாக மறைமுகமான ஆதரவினை காமினிக்கு தேடியதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, ஐ. தே. கவின் கணிசமான அளவு உறுப்பினர்கள் மலையகத்தை பிரதிநிதித்துவம் செய்வதனால் இவர்களது பங்களிப்பும் தெரிவில் பெரும் பங்கு வகித்தன என்பதும் முக்கியமானதாகும்.

ஆகவே இந்த நெருங்கிய உறவு நிலைக்கு மத்தியிலும், தொண்டமானின் இத்தகைய அறிவிப்புக்களும் பக்கம் மாறலும் ஏன் என்ற கேள்வி எழுகின்றது. இது குறித்து பலத்த சந்தேகங்களும் தோன்றியுள்ளன. முஸ்லிம் காங்கிரசினதும் மலையக மக்கள் முன்னணியினதும் ஆதரவைப் பெற்றுள்ள பொ. ஐ. முன்னணி அரசாங்கத்துள் இ. தொ. கா. பிரவேசிப்பதன் மூலம் இக்கட்சிகளை ஓரம் கட்டுவதென்றும் தகுந்த சமயத்தில் ஐ தே. க. கொண்டு வரும் நம்பிக்கையில்லா தீர்மானத்தில் அரசாங்கத்தின் காலை வாருவதென்றும் தொண்டமானின் திட்டமுள்ளதாக சில சந்தேகங்கள் எழுந்துள்ளன.

பத்திரிகையொன்றுக்கு தொண்டமான் அளித்த பேட்டியொன்றில் ''தோசையை தோசைக்கல்லிலிருந்து எப்போது எடுக்கவேண்டும், எப்போது பிரட்ட வேண்டும் என்பதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும்'' எனத் தெரிவித்துள்ளதும் இங்கு கவனிக்கத்தக்கது

## பொ.ஐ.மு.மௌனம்

இதேவேளை தொண்டமானின் திடீர் அறிவிப்புக்கள் தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தொண்டமானை மூன்று தடவைகள் சந்தித்து கபினட் அமைச்சர் பதவியுடன் இரு பிரதி அமைச்சர் பதவிகளுக்கு தொண்டமான் கோரியுள்ளதையும் தெரிந்துகொண்டார்.

ஆயினும் பொது ஐக்கியஜன முன்னணி வெளிப்படையாக எதையும் கூறவில்லை உத்தியோக பூர்வமான எந்த அறிவிப்புக்களும் இது வரை வெளியிடப்படவில்லை

## தெளிவான முடிவை கூறவேண்டிய கட்டாயம்

இந்த நிலையில், தொண்டமான், இக் கட்டான சூழ்நிலைகள் சூழ்ந்துநிற்க தனது எதிர்கால அரசியலை தீர்மானிக்க வேண்டியவராகிறார். தனது முன்னைய அனுபவங்கள் காரணமாக மீண்டும் கட்சிக்குள் பிளவொன்றை அவர் சந்திக்க தயாராகமாட்டார். தொண்டமானையும் அவரது சகாக்களான ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் திருப்திப் படுத்தக் கூடிய வகையில், அமைச்சர் பதவிகளையும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளையும், பொதுஜன ஐக்கிய முன்னணி உறுதி செய்யாத பட்சத்தில் தொண்டமான், அரசாங்கத்துடன் இணைவதென்பது அவராலேயே ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயம். மலையகத்தில், தனக்கெதிராக வளர்ச்சி பெறக்கூடிய சக்தியொன்றை அருகில் வைத்து அணைத்திருக்கக்கூடிய நிலையிலும் தொண்டமான் இருக்கமாட்டாரென்பதும் வெளிப்படையானது. எனவே தொண்டமான் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளில் தெளிவற்ற முறையில் செயற்படுவாராயின் அவரது அரசியல் எதிர்காலம் கேள்விக்குரியதாகவே இருக்கும்.

இருப்பினும் எதிர்வரவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக தனது தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயமும் அவருக்குண்டு. இப்போது தொண்டமான் எடுக்கக் கூடிய முடிவிலேயே அவரது அரசியல் எதிர்காலமும் இ- தொ- காவின் எதிர்காலமும் தங்கி நிற்கின்றது.


## பிறந்த நாள் அழைப்பிதழ்

23-09-94 (வெள்ளி) கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி உதயன் தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**செல்வன் உ. உதயஷாரா**

**(லக்ஷன்)**

தனது இரண்டாவதுபிறந்த நாளை இன்று 23-09-94 சிறப்பாக கொண்டாடுகின்றார் இவ்வழைப்பிதழை உற்றார், உறவினர்கள், நண்பர்கள ஏற்றுக் கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். தனிப்பட்ட அழைப்புக்கள் வழங்கப்படாததால் இவ் அழைப்பிதழை அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

திரு.திருமதி உதயன் குடும்பத்தினர்.

கோண்டாவில் மேற்கு, (பொருளியல் ஆசிரியர்)

(9490)

# இந்திய மேலாண்மைக்கு எதிராக கிளர்ந்தெழும் இன்னொரு விடுதலை அமைப்பு

'குமுறும் எரிமலை மேல் குந்தியிருக்கும் இந்தியா' என 12-11-93ஆம்திகதியவெள்ளி மஞ்சரியில்குறிப்பிட்டது போலவே இப்பொழுது இந்தியா வெங்கும் விடுதலைக் குரல்கள் பல்வேறு வடிவங்களிலே ஒலிக்கின்றன. காஷ்மீரிலோ இந்தியப் படைகளின் கொடுமைகள் உச்சமடையும் நிலையில் மக்களின் விடிவிற்கான போராட்டம் வலுக்கின்றது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலோ, 'மாநிலங்களுக்குள்ளே மாநிலங்கள்' கோரி அரசியல் கோரிக்கைகள் மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களாக மாற்றம் பெறுகின்றன. பிகார் மாநிலத்தில் 'யார்க்கண்ட்' மாநிலக் கோரிக்கை, உத்தரப்பிரதேச மலைவாழ் மக்களின் 'உத்தார கண்ட்' மாநிலக் கோரிக்கைகள் வலுவடைகின்றன அதே வேளை இந்தியாவின் வெகுதூரப் பிரதேசமான வடகிழக்கு மாநில மலைப் பகுதியிலோ முழு அளவிலான தேசிய விடுதலைப் போராட்டங்கள் பரிணமிக்கின்றன. அண்மைக் காலமாக இந்திய இராணுவத்திற்கு நாகலாந்து, அசாம், மணிப்பூர், திரிப்புரா பகுதிகளில் ஏற்பட்டு வரும் இழப்புக்கள் பெருத்த அதிர்ச்சியை இந்திய ஆளும் வருக்கத்திற்கு இப்போது ஏற்படுத்திவிட்டன.

''ஏழு சகோதரிகள்'' என வழைக்கப்படும் இவ் வடகிழக்கு மாநிலங்களுக்கும் (அருணாசலப் பிரதேசம், மணிப்பூர், அசாம், மேகாலயா, மிசோராம், திரிப்புரா, நாகலாந்து) இந்தியாவிற்குமான உறவு மயிரிழையில்ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. ஆங்கிலேயர் ஆட்சி விளைவித்த துரோகம் காரணமாக இந்தியாவோடு எவ்வகையிலும் எவ்விதத்திலும் தொடர்பற்ற இம் மலைப்பகுதி வாழ் தொன்மை மக்கள் இன்று இந்திய அரசின் பிடியிலே சிக்கித்தவிக்கின்றனர். தனது முதலாளிய பொருண்மிய நலன், தனது எல்லைப் பகுதி பாதுகாப்பு கருதி ஒரே இந்தியா என்கிற தேசியப் போர்வைக்குள் இம்மக்களை போர்த்தி இந்தியப் பிரசைகள் என்கிற பொறிக்குள் சிக்க எடுத்த முயற்சிகள் '' இப்போது மிக மோசமான பின்னடைவுகளை சந்திக்கின்றன தமக்கான தனியான தேசிய அடையாளங்கள், பண்பாடு, கலாசாரத்தை கொண்டுள்ள மக்கள் இன்று கிறித்தவ மிசனரிமார் பணி காரணமாக பெரும்பான்மை கிறித்தவராக ஆங்கில அறிவு பெற்றோராக உள்ளனர். இவர்கள் இன்று தம்தம் மத்தியிலே குடியேற்றப்படும் நேபாள, பங்களாதேச மியான்மார் அகதி மக்களை வெளியேறுமாறு மண்ணின் மைந்தரை ''அழிக்கும் முயற்சி இது'' வெனக் கூறி இந்திய அரசிற்கு எதிராக போர்க் கொடி உயர்த்தியுள்ளனர். இம் மக்கட்கு இன வழி உறவு காரணமாக மியன்மாரும் இந்திய எதிர்ப்புக் கொள்கை காரணமாக பங்களாதேசமும்ஏன் பாக்கித்தானும் உதவி செய்வது இந்திய அரசிற்கு மீளாத்தலைவலியாகி விட்டது.

பல்வேறு வடகிழக்கு மாநிலங்களில் உள்ள இப் போராட்ட அமைப்புக்களின் புதிய பரிணாம வளர்ச்சியின் வீச்சுக்கள் இப்போது பல்வேறு வழிகளிலும் வெளிப்படத் தொடங்கி விட்டன. அண்மையில் கடந்த ஆகஸ்ட் 15ம் திகதி இந்தியா முழுமையும் சுதந்திரம் பெற்றதாக கூறப்படும் தினத்தைக் கொண்டாடிய போது வடகிழக்கு மாநிலங்களில் வெளியார் வருகை எதிர்ப்புக் கறுப்புத் தினமாக பதினொரு மணிநேர முழுக் கதவடைப்பு நடைபெற்றது. பல மாநிலங்களில் தேசியக் கொடியைத் தன்னும் அவ்வம் மாநிலமுதல்வர்களால் ஆளுநனர்களால் ஏற்ற முடியவில்லை. இப்பகுதியின் சகல மாணவர் அமைப்புக்களையும் உள்ளடக்கிய NESO எனப்படும் வடகிழக்கு மாணவர் அமைப்பால் இவ் எதிர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்திய அரசிற்கு பெருத்த அவமானத்தை இச்சம்பவம் ஏற்படுத்தி விட்டது. இத்தகைய மக்கள் முன்னணி அமைப்பு எதிர்ப்புக்கள் ஒரு புறமிருக்க இப்பகுதியின் ஒரு சில போராட்ட அமைப்புக்களின் வளர்ச்சி இந்திய அரசு பெருத்த தொல்லைகளை இப்பகுதிகளில் விரைவில் சந்திக்கப் போகின்றது என்பதை விளக்கி நிற்கின்றன.

7 மாநிலங்களிலும் பல்வேறு விடுதலை அமைப்புக்கள் இன்றிருந்தாலும் நாகலாந்து, மணிப்பூர் பகுதிகளில் நிலைகொண்டு இயங்கி வரும் நாகலாந்து தேசிய சோசலிசப் பேரவையின் (NSCN- National Socialist Council of Nagaland) வலுவான வளர்ச்சி இங்கு குறிப்பிட வேண்டியதொரு புதியதொரு பரிமாணமாகின்றது. இப்பேரவை 1988ஆம் ஆண்டு இரு பிரிவாக பிரிந்த போது இந்திய அரசு இது வலுவிழந்து விடும் என அப்போது பெருமகிழ்ச்சி கொண்டது. அதனை ஊக்குவித்தது. ஆனால் நடந்ததோ வேறு இன்று பலமுள்ள பாரிய அமைப்பாக நாகலாந்து சோசலிசப் பேரவை [ஐசாக் முரயாப் பிரிவு] விளங்குகின்றது. இது ஆங்கிலத்தில்NSCNI m NSCN Issac Muriah) என அழைக்கப்படுகின்றது. முன்னர் நாகலாந்திற்கு விடுதலை கோரி போராடிய பிசோ என்பவர் (A.Z.Phizo) என்கிற தலைவர் 1975 ஆம் ஆண்டளவில் இந்திய அரசோடு சில்லோங் உடன்பாட்டில் கைச்சாத்திட்டு போராட்டத்தை கைவிட்டபின்அவரது துரோகத்தை கண்டித்து 1980 அளவில் ஐசாக் சிசிசுவு (Issac Chi Shiswu) முவியா (T.muivah) கப்ளாங் (C. S. (Kaplang) என்கிற மூவராலுமே Nscn தொடக்கத்தில் உருவாக்கப்பட்டது. எனினும் இனக்குழு சிக்கல் காரணமாக 1988 அளவில் இயக்க உள் மோதலின் பின் கப்ளாங் தலைமையில் இன்னொரு பிரிவு (Nscn - k) உருவானது ஆனால் இப்பிரிவு இன்று செயலிழந்து போய்விட்டது. Nscn (I.m) இப்பிரிவே இன்று பலமிக்கதாகிவிட்டது இது முன்னய வரலாறு.

இன்று Nscn (I.m) அமைப்புசருவதேசப்பிரபல்யம்மிக்கதொரு அமைப்பு நாகாபூர்வீக மக்களின் வாழ்விற்காக போராடும் அமைப்பென உலகால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பு. இன்று பாங்கொக் காத்மண்டு போன்ற ஆசிய நகரங்களில் மட்டுமல்ல நியூயோர்க் ,ஜெனிவா போன்ற சருவதேசநகரங்களிலும்தனது இருப்பை பூரணமாக நிலைநிறுத்தி வருகின்றது. நாகா மக்களின் விடிவு தொடர்பாக ஐ.நா.வின் பூர்வீக மக்களின் பாதுகாப்பு அமைப்போடு Nscn Im நெருங்கியதொடர்பைக் கொண்டிருக்கின்றது இதன் செயலாளரான முயியா [Muivah] அண்மையில் ஜெனிவாவில் வைத்துக்கொடுத்த செவ்வியொன்று மிக்க பரபரப்பாக இன்று பேசப்படுகின்றது. இந்திய அரசு தொடர்ந்து விடுக்கும் பேச்சுவார்த்தைக்கான கோரிக்கைகளை போலியானவை என்று நிராகரித்ததோடு இந்திய இராணுவத்தைதாம்இனிமேல்தொடர்ந்து கடுமையாக எதிர்கொள்ளப் போவதாக கூறியிருந்தார். இதன் பொருள் - ஏற்கனவே மீளாத சிக்கலில் காஷ்மீர், பஞ்சாப்பில் சிக்கியிருக்கும் இந்திய இராணுவம் மேலும் பல சிக்கலை சந்திக்கப் போகின்றது என்பதே. அத்தோடு ஒய்வு ஒழிச்சலின்றி இந்திய இராணுவத்திற்கு இனி எட்டாத சங்கதியாகப்போகின்றது என்றும் ஆய்வாளர் கருதுகின்றனர். முவியா கூறியது போலவே அண்மைக்காலத்தில் மணிப்பூர் பகுதியில் நாகா விடுதலை அமைப்பின் தாக்குதல்கள் தீவிரமாகியதோடு 50க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு விட்டனர்.

> 'அடக்கு முறையென்னும் அத்திவாரத்தில் கட்டிய இந்தியா எனும் கோட்டைக்குள் பாரிய வெடிப்புக்கள் பலவிடங்களிலே தோன்றுகின்றன. இப்போது வடகிழக்கு பகுதியில் பெரும் வலுவுடன் கிளர்ந்தெழுகின்றது நாகா மக்களின் விடுதலை அமைப்பு.'

**பாலகுமாரன்**

இவற்றினை விட இன்னொரு மிகத்தொல்லை வாய்ந்த நிலையொன்றினை இந்தியா சந்திக்கப்போகின்றது நாகா விடுதலை அமைப்பானது இப்போது திரிப்புரா, அசாம், மேகாலயா பகுதி விடுதலை அமைப்புக்களோடும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி விட்டது. இவற்றுள் முக்கியமானது. அசாமின் மேற்பகுதியில் போடோலாந்து என தனிநாடு கோரும் போடோ இன மக்களின் உறுதி மிக்க அமைப்பான போடோ பாதுகாப்பு அணியோடு (Bdsf Bodo Security Force] மிக நெருங்கிய தொடர்பினை இவர்கள்ஏற்படுத்தியமைதான். இங்குள்ள முக்கியம் என்னவென்றால் மேற்கு வங்கத்தையும் அசாமையும் இணைக்கும்50 கிலோ மீற்றர் அகலமான சிறிய கோழிக்குஞ்சின் கழுத்துப் போன்ற பகுதி போடோ மக்களின் பிரதானதளமாக விளங்குகின்றது. அத்தோடு இதன் வடக்கில் பூட்டான் எல்லையோரமாக இவர்கள் முகாம்கள் அமைத்து தம்மை பலப்படுத்துவதாகக் கூறப்படுகின்றது. இப்பகுதியே வடகிழக்கு மாநிலங்களை இந்தியாவோடு இணைக்கும் நிலப்பகுதி ஆகும் பிரதான நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள் இதற்கூடாகவே செல்வதால் இந்திய அரசினைபே பணயம் வைக்கத்தக்க நிலையை நாகாஅமைப்பு விரைவில் அடையும் நிலை தோன்றுகின்றது. இத்தோடு மேற்கு வங்கத்தின் இவ்வடக்குப் பகுதியிலேயே இந்திய அரசிற்கு 1980 களில் பெருத்த தலைவலியை கொடுத்த டார்ஜிலிங் (Darjeeling) மலைப்பகுதி உள்ளது. இங்குள்ள கூர்க்கா இன மக்கள் சுபாஸ் கெய்சிங் தலைமையில்தான் சில காலத்திற்கு முன்னர் தனிமாநிலம் கோரி கூர்க்கா தேசியவிடுதலை முன்னணி (GWlf) என போராடியவர்கள். இப்போது டார்ஜிலிங் பகுதிக்கு சுயாட்சி சபையொன்றைப்பெற்று - மிக்க மனக்குறையோடு வாழ்பவர்கள். எனவே கூட்டிக் கழித்து எப்படி பார்த்தாலும் இப்பகுதியில் நாகா விடுதலை அமைப்பு வேரூன்ற முயல்வது இந்தியாவிற்கும் வடகிழக்கு மாநிலங்கட்குமான தரைவழி தொடர்பை விரைவில் அபாயத்திற்குள்ளாக்கப் போகின்றது என்பதுதான்.

இத்தகைய நிலையிலே என்ன செய்வது என்று புரியாமல் இரண்டுங்கெட்டான் நிலையில் இன்று இந்திய அரசு இருக்கின்றது. முற்றிலுமான அன்னியப்பட்ட பகைமை நிரம்பிய மக்களைக் கொண்ட இப்பகுதியை எவ்வாறு நிருவகிப்பது என்பதே பாரியசிக்கல் ஏனென்றால்எவ்விதஉட்கட்டுமானஅமைப்புக்கள் அந்த மாநிலஅரசுகட்கு எவ்வித வருமானமும் வழங்காதநிலையில் உள்ள இம்மாநிலங்களை ஆள்வதற்கு ஒருசிலரைத்தேடிப்பிடித்து இனக்குழு வேறுபாடுகளைப் பயன்படுத்தி- பாரிய அளவில் நிதியுதவி செய்து இராணுவத்தை பெயரளவிற்கு நிறுத்தி தன் பிடியை இப்பகுதிகளில் தக்க வைக்க எடுக்கும் முயற்சிகள் எவ்விதபயனையும் தரவில்லை இங்குள்ள வியப்புஎன்னவென்றால் ஆட்சியிலிருப்போரே போராளி இயக்கங்களோடு மறைமுக தொடர்புகளை கொண்டவராக அவர்கள் ஆணைகட்கு கட்டுப்பட்டவராக இருக்கின்றமைதான். நாகலாந்திலோ மாற்று அரசையே போராளிகள் நடாத்தி வருகின்றனர். இவர்களது ஆணைக்கே உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் எல்லோரும் கட்டுப்பட்டு நடக்கின்றனர். பாரிய அரசின் ஊழியர்கள் அனைவரும்தமது மாத வேதனத்தில் 25-35 விழுக்காடுவரை விடுதலை வரியாக NSCN அமைப்பிற்கு வழங்கவேண்டும். இத்தொகை மாதா மாதம் கழிக்கப்பட்டு அவ்வப்பகுதி துறையாலே இயக்கத்திற்கு அனுப்பப்படுகின்றது. இது போலவே அசாமின் தேயிலை பெருந்தோட்டத்துறையானதுசரிஅல்லது இப்பகுதிகளின் மிக்க பொருண்மிய வளமான நிலக்கரி, நிலநெய் அகழ்தெடுக்கும் துறையாயினுஞ்சரி, போராளிகளின் அனுமதியின்றி இயங்க முடியாததநிலை இன்றுள்ளது.

இத்தகைய இக்கட்டான நிலையிலே இந்திய மியான்மார், நாகா அமைப்புக்கட்கு செய்யும் உதவிகளை தடுக்க முற்படுகின்றது குறிப்பாக வடகிழக்கு மாநிலங்களின் மேற்குப் பகுதி பங்களாதேச எல்லையாக இருப்பதால் இங்கு பாக்கிதான் பங்களா தேசமும் கூட்டாக போராளி அமைப்புகட்கு உதவுவதை எவ்வகையிலும்இந்தியாவால் தடுக்க முடியாது எனவே மற்றகிழக்கெல்லையில்மியான்மாரின் உதவிகளை நிறுத்த இந்தியா முயல்கின்றது இதற்காக இதுவரை காலமும் மியான்மாரை அதன் மனித உரிமை மீறல்கட்காக கடுமையாக கண்டித்த இந்தியா இப்போது பெருத்த குத்துக் கரணம் அடித்துள்ளது. மியான்மாரோடு நல்லுறவைப் பேணுவதற்காக இதுவரை காலமும் மியான்மாரின் சனநாயக ஆதரவு மாணவர் அமைப்பின் உறுப்பினர்கட்கு தான் அளித்து வந்த அடைக்கல உதவிகளை இப்போது இந்தியா நிறுத்திவிட்டது சிறையில் வாடும் சூகி அம்மையாரைப் பற்றி இப்போது பேச்செடுக்காமல் மியான்மாரோடு நெருங்கிய உறவைப் பேண முயல்கின்றது எனினும் இம்முயற்சிகள் ஏதும் பயன் அளிக்கப் போவதில்லையென்றே கருதப்படுகின்றது.

எனவேஇப்போது தோன்றும் கேள்வி என்னவென்றால் எப்போது இம்மக்களை வரலாறு விடுவிக்கப்போகின்றது என்பதுதான் உள்ளே கனன்று குமுறும் எரிமலை என்றோ ஒரு நாள் வெடித்துத்தான் தீரவேண்டும். எனவே இந்தியாவின் செயற்கையான தேசியப்போர்வைகிழியும் நாளையும் வரலாறு அதன் போக்கில் நிச்சயம் தீர்மானிக்கும் அதுவரை இம் மக்களின் விடுதலைப் போராட்டங்களும் தொடரும்.


## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்துவம் விதிமுறைகளுக்கு அமைய ஒவ்வொரு காலாண்டும் பூர்த்தி செய்வதால் இதற்கு அமைவாக 30-9-94 திகதியுடன் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. ஆகவே தாங்கள் ஏற்கனவே அங்கத்தவராக சேர்ந்து பங்கு முழுவதும் செலுத்தாதவர்கள் 30-9-94க்கு முன் தாங்கள் சேர்ந்த கிளையில் மிகுதிப் பங்குப்பணத்தை செலுத்தி பூரண அங்கத்தவராக சேருமாறு கேட்டுக்கொள்கிறோம். குறிப்பாக 30 .9 .94 அங்கத்தவர்களின் பட்டியலைக் கொண்டே எதிர்வரும் கிளைக்குழுத் தேர்தல் நடைபெறும்.

செயலாளர்.

(சி-10348)

# ஈழத்து சஞ்சிகைகளின் வளர்ச்சியும், பின்னடைவும்!

வவுனியா திலீபன்

ஒரு சந்தோஷமான செய்தி!

ஈழத்தில் ஆரம்பிக்கப்பட்ட சில சஞ்சிகைகள் நீண்டகாலமாக தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றன.

மல்லிகை முப்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து கொள்ளப் போகிறது. சிரித்திரன், தாயகம், நான் போன்ற சஞ்சிகைகளும் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இச்செய்தி எமக்கு ஒரு ஆச்சரியமான சந்தோஷத்தை மனதில் கிளர்த்துகின்றது.

இனியொரு வேதனையான செய்தி!

மே முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட புதினம் இரு வாரப் பத்திரிகை ஆறு இதழ்களுடன் அமரத்துவமாகி விட்டது.

இது ஆச்சரியமற்ற சோகம் மிகுந்த செய்தி.

காரணம் இந்த மண்ணில் புதிய, சஞ்சிகைகளின் பிறந்ததினம் குறிக்கப்படும்போதே அதன் மரணநாளும் கணிக்கப்பட்டு விடும்.

சும்மா சொல்லக் கூடாது. ஈழத்தில் இலக்கியப் பிரசவத்திற்காக உருவான சஞ்சிகைகளின் தொகையை பட்டியலிடத் தொடங்கினால் எமக்கு ஒருநாள் போதாது. அந்தளவு எண்ணிக்கையில் இங்கு சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன.

ஒரு ஆண்டு, சில ஆண்டு, ஒரு இதழ், சில இதழ்களுடன் அந்தச் சஞ்சிகைகள் ஆயுளைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளன,

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னரும் புதினம் என்ற பத்திரிகை கலை இலக்கியத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது, சில இதழ்கள் வெளிவந்தநிலையில் அது நின்று போனது, அதுவும் ஒரு 'வரதர்' வெளியீடுதான்.

வெளிச்சம் 28 ஆவது இதழை வெளிக்கொணர்ந்திருக்கின்றது. சாளரம் நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. நங்கூரம் சில தினங்களுக்கு முன்னர்தான் இரண்டாவது ஆண்டைப் பூர்த்திசெய்தது.

இவை இந்த மண்ணில் எதிர்நீச்சல் போட்டு வெளிவந்துகொண்டிருக்கும் சஞ்சிகைகள்.

1940 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பல சஞ்சிகைகள் இருந்த வடு தெரியாமல் மறைந்துபோயுள்ளன,

தமிழ்நாட்டில் மணிக்கொடி சஞ்சிகையினால் 'மணிக்கொடி காலம்' என்ற இலக்கிய காலம் பதிவு செய்யப்பட்ட மாதிரி ஈழத்தில் மறுமலர்ச்சி வெளிவந்து மறுமலர்ச்சி காலத்தை உருவாக்கியது.

தமிழ்நாட்டு சஞ்சிகைகளுக்கு சவால் விடும் அளவிற்கு காத்திரமான இலக்கிய சிருஷ்டிப்புகளை பிரசுரித்தது; இன்றுள்ள பல இலக்கியவாதிகள் மறுமலர்ச்சியைப் பற்றிப் பேசிக்கொள்வதுடன் சரி: அது அமரத்துவமாகி விட்டதை எண்ணி வேதனைப்படுவதுடன் சரி.

ஏனெனில், ஈழத்தில் இலக்கிய சஞ்சிகைகளின் வரலாறு இதுவாகத் தானிருக்கின்றது. விதிவிலக்காக ஒரு மல்லிகையைப் பார்க்கின்றோம். அதுவும் சிற்றிதழ் என்ற தரத்தில்தான் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

40 களில் மறுமலர்ச்சியும் 50 களில் தேன்மொழியும், 60 களின் நடுப்பகுதியில் வசந்தமும், வெள்ளியும் வெளிவந்தன 70 களில் விவேகி தாமரை, பூரணி, அலை, சுடர், இனமுழக்கம், அகிலம், கீற்று ஆகியவை வெளிவந்தன.

80 களில் சமர், செவ்வந்தி, வாகை, களம், நாங்கள், எக்காளம், புதுசு, கிருதயுகம், மாருதம் அமிர்தகங்கை, மாற்று. விளக்கு, மேகம், மகாவலி, மக்கள் இலக்கியம் ஆகிய சஞ்சிகைகள் வெளிவந்தன.

70 களில் வெளிவரத் தொடங்கிய அலை, 80 களின் இறுதி வரையும் வெளிவந்தது. 80 களின் இறுதியில் வெளிவரத்தொடங்கிய உள்ளம் 90 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரை தொடர்ச்சியாக வந்தது.

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள சஞ்சிகைகளை விட இன்னும் பல இலக்கிய, அரசியல், பல்சுவை விஷயங்களை உள்ளடக்கிய சஞ்சிகைகள் வெளிவந்த வேகத்திலேயே ஆயுளைக்குறுக்கிக் கொண்டன.

இதை இந்த மண்ணின் விதி என்று உறுதியாகச் சொல்ல முடியாது. ஏனெனில் தமிழ் நாட்டிலும் இதே நிலை உள்ளது. மணிக்கொடிக்கும் இதே நிலைதான்.

காத்திரமான இலக்கியப் படைப்புகள், இலக்கியம் சார்ந்த கட்டுரைகள், ஆக்கபூர்வமான அறிவியல் கட்டுரைகள் மணிக்கொடியின் தாரகமந்திரமாக இருந்தன.

இதே மாதிரி, தமிழ் நாட்டில் பலராலும் பெருமையுடன் பேசப்பட்ட இலக்கிய இதழ் சரஸ்வதி, விஜயபாஸ்கரனை ஆசிரியராகக் கொண்ட இந்தச் சஞ்சிகை நான்காவது இதழுடன் மறைந்து போனது.

இதே போல நடை, எழுத்து, கசட தபற ஆகிய சஞ்சிகைகளும் மறைந்து போனவற்றில் குறிப்பிடத்தக்கன.

காத்திரமான சஞ்சிகைகள் அல்லது பத்திரிகைகள் இங்கு தொடர்ச்சியாக வெளிவராமைக்கான காரணங்கள் பற்றி ஆராய்வோம்.

பலர் மத்தியிலிருந்தும் வெவ்வேறான கருத்துக்கள் வெளிவருகின்றன.

'நமது இலக்கிய வரலாற்றினைப் பார்த்தால், சஞ்சிகைகளின் தோற்றம் மறைவுக்குறிப்புகளே அதிகமாக உள்ளன. இது பெருமைப்படும் விடயமல்ல; பெரும் வேதனையை உருவாக்கும் ஒரு செயற்பாடு'' என 80 களின் இறுதிப்பகுதியில் வெளிவந்த 'உள்ளம்' இதழ் ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தச் சஞ்சிகை இதற்குப்பின்னர் ஓரிரு இதழ்களை மட்டும் வெளியிட்டு விட்டு மறைந்து போனது.

> **சஞ்சிகைகளின் தரத்தை நிர்ணயிப்பதிலும் வாசகர் தொகையைப் பெருக்குவதிலும் முரண்பட்ட நிலை தொடர்கிறது.**

வாசகனுக்கும் சஞ்சிகைகளுக்குமிடையே நெருக்கமின்மையே இந்த மறைவுச்சம்பவங்களுக்கு ஒரு காரணம் எனப் பேசப்படுகின்றது.

மக்கள் நெருங்கி வந்து சஞ்சிகைகளை வளர்த்தெடுப்பதில் துணை புரிவதில்லை என்ற கருத்தும் உண்டு.

எப்படியான ஆதரவு வழங்க வேண்டும்? குறிப்பிட்ட சஞ்சிகைகளை பணம் கொடுத்து வாங்கிப்படிக்கவேண்டும். மற்றையவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்

முதலில் வாசகன் வாங்கக்கூடிய விலையில் சஞ்சிகைகள் விற்பனை செய்யப்படுகிறனவா என்பதை ஆராய வேண்டும். ஒரு சஞ்சிகையின் தொழில் நுட்ப செலவைக்கூட வாசகனின் தலையில் கட்டுவதற்கு முனைகிறார்கள் என்ற கருத்தும் உண்டு.

அடுத்தது, இலக்கியம் சம்பந்தமான விஷயங்களை மட்டும் பிரசுரிப்பதனாலும் அதன் விற்பனை சுருங்கிப்போக வாய்ப்புண்டு

சாதாரண வாசகனை சஞ்சிகை எட்டச் செய்யும்நடவடிக்கையில் இறங்குவதில்லை, அவர்களுக்குரியதாகஎளிமைப்படுத்திஅமைக்கப்படுவதில்லை

இவை ஒரு சஞ்சிகையின் நீண்ட ஆயுளைக் குறைத்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

தொடர்ந்து 30ஆண்டுகளாகவெளிவரும் மல்லிகை, தற்போது 1000 பிரதிகள்தான் விற்பனை செய்யப்படுகின்றன. 70 களில்ஆரம்பித்து 15 வருடங்களாக வெளிவந்த அலை 500 பிரதிகள்தான் விற்பனை செய்யப்பட்டன.

குறிப்பிட்ட சிலவாசகர்கள் மட்டும்இவற்றை தொடர்ந்து வாசிக்கின்றார்கள்

காரணம், இந்த இதழ்கள் நாடளாவிய ரீதியில் பரவலாக்கப்படவில்லை. அஃதாவது கிராமங்களுக்கு எடுத்துச் செல்லப்படவில்லை.

இலட்சிய நோக்கமும் ஆர்வமும் கொண்ட சிலரின் செயற்பாடுகளே இச் சஞ்சிகையின் அடித்தளம். இவர்களுக்கு நிறுவன பலம் இல்லை. இந்த நிலையில் இச்சஞ்சிகைகள் அமரத்துவமாகிப்போவதைத் தவிரவேறு வழியில்லைஎன்று கருத்து முன்வைக்கப்படுகின்றது.

மணிக் கொடியிலிருந்து தமிழில் சிறு பத்திரிகைகளே இலக்கியப் பணி புரிகின்றன என்று பலரால் சொல்லப்படுவதுண்டு.

நிறுவன பலத்தை அடித்தளமாகக் கொண்ட சஞ்சிகைகள், பத்திரிகைகள் பணம்சேர்க்கும் நோக்கிலேயே கவனமாக இருக்கின்றன.

ஆனந்த விகடன், குமுதம், கல்கி, இதயம் பேசுகிறது ஆகிய சஞ்சிகைகள் பெரும் நிறுவன பலத்துடன் இலக்கியவளர்ச்சிக்கு உதவும் சஞ்சிகைகளாக தம்மை வெளிப்படுத்திக் கொண்டு மேலோட்டமான கருத்துக்களை வாசகன் மத்தியில் பரப்பி, விற்பனையை அதிகமாக்கியுள்ளன.

இதேசமயத்தில் தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் சிற்றிதழ்கள் இலட்சிய நோக்கம் கொண்ட இளைஞர்களால் ஆழமான விஷயங்களைச் சுமந்து வெளிவருகின்றன.

கோமல் சுவாமிநாதனை ஆசிரியராகக் கொண்ட சுபமங்களா இரண்டும் கலந்த கலவையாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. அதனுடைய இலட்சிய தாகம் என்னவோ தெரியவில்லை. ஆனால் நிறுவனத்தாரின் கொள்கைக்கேற்ப அது தன்னை மாற்றியமைப்பினும் வியப்பிற்கு இடமில்லை.

ஏனெனில் -

வாசனால் உருவாக்கப்பட்டு தரமான இலக்கிய சஞ்சிகை என பெயர் பெற்ற ஆனந்த விகடனின் இன்றைய நிலை ஆராய வேண்டியது ஆகிவிட்டது.

எமது வாசகர்களில் பலர் பரம்பரைப் பழக்க தோஷத்திலிருந்து இன்னும் விடுபடவில்லை. பெற்றோர்கள், பெற்றோர்களின் பெற்றோர்கள் எதை வாங்கி சுவாரஸ்யமாக வாசித்தார்களோ அதையே தாமும் வாசிக்க வேண்டும் என்ற நோக்கில் செயல்படுகின்றார்கள்.

இந்திய ஜனரஞ்சகச் சஞ்சிகைகளினால் ஆரோக்கியமான கலை, இலக்கிய முயற்சிகள் பாழாகின்றன,

1977ஆம் ஆண்டு இலங்கையில் ஆட்சியமைத்த ஜே. ஆரின் யூ. என். பி. அரசின் தாராள பொருளாதாரக் கொள்கையினால், ஈழச் சஞ்சிகைகளின் வளர்ச்சி எந்தளவிற்கு பாதிப்படைந்தனவோ அந்தளவிற்கு ஈழப் படைப்புகளின் வருகையும் பாதிப்படைந்தன.

தென்னிந்திய சஞ்சிகைகள் இங்கு தாராளமாக இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்னர் எமது சஞ்சிகைகளின் விற்பனை உயர்வடைந்தே காணப்பட்டன என்ற கருத்துண்டு.

இப்போது தரத்தை நிர்ணயிப்பதிலும் வாசகர் தொகையைப் பெருக்குவதிலும் முரண்பட்ட நிலை நீடிக்கின்றது.

தமிழக சஞ்சிகைகள் சுவைஞனை தமது போக்கிற்கேற்ப இழுத்துச் சென்றுள்ளன. இதனால்தான் ஈழத்துச் சஞ்சிகைகளுடன் வாசகன் முரண்பட வேண்டிய நிலை வந்தது எனவும் நியாயம் சொல்லப்படுகின்றது.

ஈழத்தில் நிறைய இலக்கியங்கள் படைக்கப்படுவதற்குரிய களம் இல்லை என்ற நிலையை போக்கடிப்பதற்கு இன்னும் நிறைய மாத, வார சஞ்சிகைகள் வெளிவரவேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களை ஆராய்வதன் மூலம் இச் சஞ்சிகைகளின் ஆயுளை நீடிக்கச் செய்யலாம்-

இங்கு இலக்கியச் சஞ்சிகைகள் வைர விழாவை நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண்டும். இதுதான் இந்தமண்ணின் தாகமாக இருக்கும்.

Nallur Branch Library

# காஸ்ட்ரோவின் கியூபா அன்றும் இன்றும் என்றும்

1959 இன் தொடக்க தினங்களில் ஹவானாவின் தெருக்களில், ஒலிவ்பச்சை நிறத்தில் வேர்வையில் ஊறிப்போன சீருடைகளை அணிந்த வண்ணம், அணிவகுத்துச் செல்லும், புரட்சிப் படையினரின் அணிவகுப்பை பார்வையிடும் தீட்சண்யமான கண்கள்.

1994இன் தொடக்க தினங்களில் 35 வருட புரட்சி நிறைவின், அணிவகுப்பை, அதே ஹவானாவின் தெருக்களில் காணும், அதே கண்கள் முகத்தின் சுருக்கங்களும் நரைத்துப் போன நீண்ட தாடியும் தவிர காஸ்ட்ரோ மாறவில்லை.

உலகின் வரைபடத்தில் கியூபாவின் பெயருக்குப் பதிலாக காஸ்ட்ரோ என்று எழுதி வைத்தால் ஏற்றுக்கொள்ளக் கூடிய, தன்னை இன்றும் ஒரு சோசலிச, கம்யூனிச வாதியென உறுதியாக கூறிக் கொள்ளும், இந்த மனிதன் இத்தினம் வரை சந்தித்துள்ள சவால்கள், இவ்வுலகில் யாரும் சந்திக்காதவை.

1492 ஒக்டோபர் 28ந் திகதியன்று, கொலம்பஸ் காலடி எடுத்து வைத்ததன் பின் ஸ்பானியர்களாலும், தொடர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கீழும் கியூபா மண் தொடர்ந்து அடிமைப்பட்டே கிடந்தது. 1898 இல் கியூபாவுக்கு விடுதலை கிடைத்தது எனக் கூறப்பட்டாலும், லத்தீன் அமெரிக்க நாடுகளில். அமெரிக்காவின் ஆதிபத்திய போக்கு தொடர்ந்து கொண்டே வந்தது.

தனக்கேற்றாற் போல, பொம்மை ஆட்சியாளர்களை வைத்திருப்பதன் மூலம், கியூபாவின் வளங்கள் அனைத்தையும் காலங்காலமாக சுருட்டிக் கொண்டே வந்தது அமெரிக்கா. இக்காலப்பகுதியில் 85 வீதமான கியூபாவின் உற்பத்திப் பொருட்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன எனக் கூறப்படுகின்றது.

இதன் பேறாக கியூபாவின் மக்களிடையே, இவ்வாறான பொருளாதார அடிமைத்தனத்திற்கு எதிரான உணர்வலைகள் மெல்ல மெல்ல தோன்றலாயிற்று. ஹவானா பல்கலைக்கழகத்தின் புத்திஜீவிகளும் மாணவர்களும், கியூபாவின் சுதந்திரத்தை நாடத் தொடங்கினர்.

> ''மக்கள் தங்களது
> உரிமைகளைப் பெற
> வேண்டும் என்று தீர்மானித்து
> விட்டால், அவர்களை
> எந்தவொரு ஆயுதமும்
> எந்தவொரு தாக்குதலும்
> அழித்துவிட முடியாது''.
>
> - பிடல் காஸ்ட்ரோ

அரசின் போக்கிற்கு மாறான கருத்தைக் கொண்டிருந்தவர்கள் எதுவித விசாரணைகளுமின்றி சுட்டுக் கொல்லப்பட்டனர். இத்தகைய நிலையில் பிடல் காஸ்ட்ரோ ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. காஸ்ட்ரோவும் அவரது இளைய சகோதரரும் தங்களதுசொந்தப் பணத்தின் மூலம் ஆயுதங்களைச் சேகரித்தனர். கியூபாவின் விடுதலையை ஆதரித்த பல இளைஞர்களும்இவர்களுடன்இணைந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து 1953, ஜூலை 26இல் கியூபா விடுதலையின் முதல் வேட்டொலி எழுந்தது. 26 வயதான காஸ்ட்ரோ என்ற அந்த இளைஞனின் விடுதலை முழக்கம் அப்போது அமெரிக்க ஆதரவு ஆட்சியை நடத்திக் கொண்டிருந்த பட்டிஸ்டாவின் ஆட்சிக்கு கலக்கத்தை அளித்தது. ''எங்கள் தந்தை நிலம் இல்லையேல் மரணம்'' என்ற புரட்சி வாசகம் கியூபாவெங்கும் பரவத் தொடங்கியது.

பட்டிஸ்டாவின் இராணுவம் காஸ்ட்ரோவை தேடத் தொடங்கியது. முளைவிட்ட புரட்சியை ஒடுக்குவதற்கு அமெரிக்கா தாராளமாக உதவி செய்தது. இதை இப்படியே விட்டால் லத்தீன் அமெரிக்காவின் பிடியை கைகழுவ வேண்டிய நிலைக்கு செல்ல வேண்டிவரலாம் என அமெரிக்கா நினைத்துக் கொண்டது.

மெக்சிக்கோவில் தலைமறைவு வாழ்க்கையை ஆரம்பித்த காஸ்ட்ரோவுக்கு கேணல் அல்பேர்ட்டோ பாயோ என்ற இராணுவ நிபுணரின் உதவி கிடைத்தது. காஸ்ட்ரோவின் வேண்டுகோளின் பேரில் கேணல் பாயோ கியூபா இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சிகளை அளித்தார். கியூப இளைஞர்கள் தாக்கிவிட்டு மறையும் உத்தியை விட, நேரடியாக போரில்ஈடுபடவே விரும்பியதாக பின்னாளில் கேணல் பாயோ தெரிவித்திருந்தார்.

இந்நாட்களில்கார்ல்மார்க்ஸ் விளாமிடீர் லெனின் ஆகியோரதுசித்தாந்தங்களில் காஸ்ட்ரோவுக்கு மேலும் சிரத்தை ஏற்பட்டது. என்றுமே தன்னை மார்க்சிஸ்ட் வாதியாகவோ கம்யூனிச வாதியாகவோ காட்டிக் கொள்வதில் உறுதியாக இருந்தவர் காஸ்ட்ரோ என்பது குறிப்பிடத்தக்கது.

1955இல் காஸ்ட்ரோவின் விடுதலை நோக்கிய பயணத்தில் பெரும் துணையொன்று கிடைத்தது. மெக்சிக்கோவில் கிடைத்த ஏர்ணஸ்டோ சேகுவேராவின் நட்பு காஸ்ட்ரோவை இன்னும் உற்சாகப்படுத்தியது. 1956 டிசம்பர் 2-ந் திகதியன்று காஸ்ட்ரோவின் சொந்த மாகாணமான ஓரியாண்டோவின்தென்பகுதியில் சேகுவேராவுடன் காஸ்ட்ரோ தாக்குதலொன்றை மேற்கொண்டார். காஸ்ட்ரோவுக்கு மக்களின் ஆதரவு தொடர்ச்சியாக பெருகி வந்தது. இதனால், காஸ்ட்ரோவுக்கு ஆதரவளித்தவர்கள் பலர் கொடூரமான முறைகளில் சித்திரவதை செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களின் இரத்த நாளங்களில் காற்றும் கற்பூர ஆவியும் செலுத்தப்பட்டு, இரத்த நாளங்கள் வெடித்து கொடூரமாக கொலை செய்யப்பட்டனர்.

கியூபாவின் அரச வானொலியில் காஸ்ட்ரோ பற்றியும் சேகுவேரா பற்றியும் விசமத்தனமான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. தாக்குதல் சம்பவமொன்றை குறிப்பிட்டு, அத்தாக்குதலில் காஸ்ட்ரோ இறந்து விட்டதாகக் கூட வதந்திகளை கியூபா வானொலி ஒலிபரப்பியது.

காஸ்ட்ரோ விடுதலையை நோக்கி நகர நகர, அமெரிக்காவின் உளவுத்துறையான சி. ஐ. ஏ. யின் எதிரிகள் பட்டியலில்அவரது பெயரும் முதலிடத்திற்கு நகரத் தொடங்கியது.

காஸ்ட்ரோவின் தலைமையிலான விடுதலைப்படை ஹவானாவில் பிரவேசித்தது 1951, ஜனவரி ஒன்றில் பட்டிஸ்டாவின் தப்பியோட்டத்துடன் கியூபா தளைகள் அறுந்து சுதந்திரமடைந்தது.

வீழ்ந்து கிடந்த கியூபாவின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தி கியூபா மக்களின் பொருளாதார விடுதலையை நாடினார் காஸ்ட்ரோ; விவசாய சீர்திருத்த நிறுவனத்தின் தலைவராக ஆர்ஜென்டைனாவில் பிறந்து கியூபாவின் கௌரவப் பிரஜையாக காஸ்ட்ரோ அங்கீகரித்த சேகுவேரா நியமிக்கப்பட்டார் தொடர்ந்து கியூபா தேசிய வங்கியின் பிரதம நிர்வாகியாகவும் நியமிக்கப்பட்டார் இந்த இருதயவியல் மருத்துவ நிபுணர்.

கல்விமானாகவும். சோசலிச விடுதலையின் பால் நாட்டங் கொண்ட போராளியாகவும் விளங்கிய சேகுவேரா கியூபாவின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து பணியாற்றத் தொடங்கினார்.

கியூபாவின் வளர்ச்சியைப்

(11ஆம் பக்கம் பார்க்க)

ரகுராம்

# சில நோய்களும் சில ஆலோசனைகளும்

## மதிப்பீட்டுரை

''சில நோய்களும் சில ஆலோசனைகளும்'' என்ற மருத்துவ நூலின் வெளியீட்டு விழா 14-09-94 அன்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்நூலில் வைத்தியக் கலாநிதி சீர்மாறன்அவர்களால் காலாகாலமாக பத்திரிகைகளிலும், வானொலியிலும் வழங்கி வரப்பட்ட நோய்கள், அவற்றுக்குரிய ஆலோசனைகள் போன்றவற்றில் சிலவற்றை தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

இந்நூலானது இரு பாகங்களையும் அவற்றுள் மொத்தமாக இருபது தலைப்புகளையும் தாங்கி எண்பத்தியெட்டு பக்கங்களைக் கொண்டதாக இருக்கின்றது.

இந்நூலாசிரியர் தற்போது பல்கலைக்கழக வைத்திய அதிகாரியாக கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். இவர் தனது கடமையுடன் இன்றைய போர்ச் சூழ்நிலையில் வாழும் மக்கள் எதிர் கொள்ளுகின்ற சுகாதார நெருக்கடிகளையும் அவற்றினைக் குணப்படுத்துவதற்கு மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஆலோசனைகளையும் அடிக்கடி பத்திரிகைகள் மூலமாகவும், வானொலி மூலமாகவும் வெளிப்படுத்தி வந்துள்ளார். இவரின் கட்டுரைகளையும், பேச்சுக்களையும் வாசித்தும், கேட்டும் பார்த்த போது இவர் சமகால நிகழ்வோடு இணைந்து, தேவைப்படுகின்ற மருத்துவ ஆலோசனைகளை கொடுத்த விதமும், மேலும் படிப்பறிவு குறைந்த பாமர மக்களுக்கு விளங்கக் கூடிய விதத்தில் பேச்சுத் தமிழில் விளக்கம் கொடுக்கும் விதமும் பாராட்டத்தக்கவை.

இம் மருத்துவ நூலானது இந் நூலாசிரியரின் முதலாவது வெளியீடாகும். ''வைத்திய கலசம்'' என்ற மருத்துவ நூலினை இலகு தமிழில் ஏற்கனவே மக்களுக்கு எழுதித் தந்த வைத்திய கலாநிதி முருகானந்தனின் பாதையிலே அடியெடுத்து வைத்துள்ள இன்னொரு வைத்தியர் இவராவார் இவர் தனது நூலில் சகல வயதினரிலும் ஏற்படுகின்ற நோய்த் தாக்கங்களில் ஒரு சிலவற்றை தெரிவு செய்து எழுதியுள்ளார். இதில் கூடுதலாக இன்றைய நெருக்கடியான சூழ் நிலையில் குழந்தைகள்மத்தியில் ஏற்படுகின்ற பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை ஆராய்ந்துள்ளார்.

இந்நூலில் முதலாவதாக குழந்தைகளின் உடல், உள வளர்ச்சிப் படிகளை மிக இலகுவாக எளிய தமிழில் சகல மட்ட மக்களுக்கும் விளங்கக் கூடிய விதத்தில் தெளிவாக எழுதியுள்ளார். இவ் ஆலோசனையானது தாய்மார்களுக்கு தங்கள் குழந்தைகளின் வளர்ச்சிப்படியில் ஏற்படுகின்ற குறைபாடுகள், பின்னடைவுகளை இலகுவில் - கண்டறியவும் அத்துடன் இதற்கு உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறவும் வழிவகுக்கின்றது.

அடுத்ததாக ஆரோக்கியமான, சுபீட்சமான, புத்தி சாதுரியமிக்க சமுதாயத்தை கட்டியெழுப்ப வேணுமாயின் நாம் இப்போதுள்ள இளம் சிறார்களை நோயற்ற, திடகாத்திரமுள்ள, சுகாதார நலனுள்ள பிள்ளைகளாக வளர்க்க வேண்டும். இதற்கு ஏதுவாக உயிராபத்தையும் உடலில் நிரந்தரப் பாதிப்புக்களை உண்டாக்கும் சில நோய்களான போலியோ, ஏற்புவலி போன்றவற்றையும் சுட்டிக்காட்டி இவற்றில் இருந்து எம் சிறார்களை காப்பாற்றுவதற்கு போடவேண்டிய தடுப்பூசிகள் பற்றி தெளிவாக எடுத்துரைத்துள்ளார். இதில் இவர் இத் தடுப்பூசி

வைத்தியக் கலாநிதி
சி. பத்மலோசினி

கள் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து பாதுகாக்கப்படுகின்றன என்பதையும் ஆகவே இன்னைய மின்சார வசதியற்ற சூழ்நிலையில் எல்லா இடங்களிலும் இவ் ஊசிகளைநம்பிப்போடாமல்குளிர்சாதனப் பெட்டிகள்இயங்குகின்றயாழ்வைத்தியசாலை, மந்திகை வைத்தியசாலை போன்ற இடங்களில் சென்று தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறும் வற்புறுத்தியுள்ளார். இவ் விடயம் பல மக்களுக்கு தெரியாதது என்பதினால் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்று எம் மக்களின் மத்தியில் பலர் ஏற்புவலியினால் ஏற்படுகின்ற ஆபத்தைப் பற்றி இன்னும் தெரியாமல் இருக்கிறார்கள். இதனால் தொடர்ந்தும் ஏற்புவலியால் பாதிப்படைந்தவர்கள் சிகிச்சைக்காக வந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி வருபவர்களில் 90% இறப்பதையும் உயிர் பெறும் 10% திலும் பாதிப்பு நீண்ட காலத்திற்கு இருப்பதையும் சுட்டிக்காட்டியதோடு இவர் இந்நோய் வராமல் சுலபமாக தடுக்க முடியும் என்பதையும், இதற்கு ஏற்புத் தடை ஊசிகள் போடும் முறைகளையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும் பல் சம்பந்தமான நோய்கள் ஏற்படாமல் எவ்வாறு பற்களைப் பாதுகாப்பது என்பது பற்றியும். பற்களின் தொழிற்பாடுகள் அவசியம் போன்றவற்றைப் பற்றியும் அரிய கருத்துக்களை தந்துள்ளார். அத்துடன் மின்சாரமின்மை, போக்குவரத்து சிக்கல், வைத்திய நிபுணரின்மை, மருந்துகள் பற்றாக்குறை, மருந்துகளின் விலை, பொருளாதாரக் கஷ்டம் போன்ற பல்வேறு நெருக்கடிகளைச் சுட்டிக் காட்டி இவ்வாறான இக்கட்டான நிலையில் நோய் வந்த பின்பு சிகிச்சை எடுப்பதில் எதிர்நோக்கும் பல சிக்கல்களைத் தெளிவுபடுத்தி, வரும் முன் காக்கக் கூடிய பல நோய்களை எடுத்துக் கூறி, அவற்றை வராமல் தடுப்பதற்குரிய வழிமுறைகளையும் கூறியுள்ளார். இவற்றைவிட அகதி முகாம்களில் ஏற்படுகின்ற குடிநீர்ப் பிரச்சினை இவற்றால் ஏற்படுகின்ற நோய்கள் போன்றவற்றையும் இவற்றிலிருந்து எவ்வாறு தப்பிக்கொள்வது என்பதற்கான ஆலோசனைகளும் தரப்பட்டுள்ளன.

இன்றைய காலகட்டத்தில் எம் மண்ணில் புற்றுநோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதில் குறிப்பாக அதிகளவில் ஏற்படுகின்ற வாய்ப் புற்றுநோய், மார்புப் புற்றுநோய் போன்றன பற்றி எழுதியுள்ளார். மேலும் நீரிழிவு, இரத்தச்சோகை இவற்றுக்கான காரணங்கள், ஆலோசனைகள் போன்றனவையும் எழுதப்பட்டுள்ளன ஆனால் இன்று மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ள செப்ரிசீமியா மக்களுக்கு பெரும் தொல்லை கொடுக்கின்ற தோல் வியாதிகள், மக்கள் மத்தியில் இன்னமும் காணப்படுகின்ற மூட நம்பிக்கைகளை தெளிவு படுத்தும் வகையில் குழந்தைகளில் உப உணவூட்டலின் ஆரம்பமும் அவசியமும் போன்ற பல்வேறு அம்சங்களை ஆராய்ந்துபார்க்காதது ஒரு பெரும் குறையாகவே உள்ளது.

மேலும் இந் நூலில் பல விடயங்களை ஒரே பந்தியில் ஒன்றாக திணித்துள்ளபடியால் சாதாரண மக்களுக்கு இதனை விளங்குவதில் சிரமங்கள் ஏற்படுவதுடன் இப்படியான வசனங்கள் பிழையான தகவல்களையும் தரக்கூடியதாக அமைகின்றன. உதாரணமாக-

(8ஆம் பக்கம் பார்க்க)

# 45ம் நாள் நினைவலைகள்

பூரண கட்டுப்பாட்டில் உள்ள B M C பொலிஸ் நிலையத்தின் மீது 11-8-94 அன்று விடுதலைப்புலிகளின் ''கொமாண்டோ'' அணியினர் நடாத்திய தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட,



பிறப்பு

26 - 10 - 1974

வீரச்சாவு

11 - 8 - 94

## கப்டன் குமரன்
### (பரமேஸ்வரன் பிரதீபன்)

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

குணத்தினால் குமரன் நீ
குன்றனைய தீபம் நீ
குன்றிலிருக்கும் குமரன் என்ற
நாமம் கொண்ட குமரன் எங்கள் - பிரதீபன்:

தளராத நெஞ்சோடு தன்னையே அர்ப்பணித்தாய்
அயராத செயலோடு வீரப் புலியாய்
வாட்டும் சோகத்தால் வாடுகின்றோம் நாளும்
தொட்டுத் தொடருகிறோம் உன் நினைவில் எந்
- நாளும்.

இவரை இழந்து துயரமுறும் தாய், தந்தை, அண்ணா, தங்கை ஆகியோருக்கு எமது ஆறுதல் கண்ணீர் முத்துக்கள். 24-09-94 சனிக்கிழமை (நாளை) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்தில் சகல போராளிகளையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இவரின் துயரத்தால் வாடும் Dr. சுந்தரராயன், தர்மேந்திரா, பாலேந்திரன், லிங்கேஸ்வரன், தயாநந்தன், ரமணன், ஜெயந்தன், தனேந்திரன். வாகீஸ்வரன், தினேஷ், ராதா கிருஷ்ணன், சுகந்தினி, சாந்தகுமாரி, சுஜீவா, ஜனனி, சஜனி,

சோமசுந்தரப் புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய். (9487)

# சில நோய்

குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் கொடுக்கின்ற விடயத்தில் முக்கூட்டுத் தடுப்பூசியை 3-ம், 5-ம், 7-ம் மாதங்களின் போது கொடுப்பதாகவும் பின்பு 9 ம் மாத முடிவிலும், 18-ம் மாதத்திலும் கொடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார் உண்மையில் 9-ம் மாத முடிவில் ஓர் தடுப்பூசி போடப்படுகின்றது அது ஏற்புவலி, தொண்டைக் கரப்பான், குக்கல் போன்றவற்றிற்கு போடப்படும் முக்கூட்டுத் தடுப்பூசியல்ல. சின்னமுத்து வராமல் போடப்படும் சின்னமுத்துத் தடுப்பூசியே ஆகும். இவ்வாறான பிரச்சினை மேலும் சில இடங்களில் வருகின்றது இத் தவறுகளை வராமல் தடுப்பதற்கு ஒரே பந்தியில் பல விடயங்களை திணிக்காமல் அவற்றை தடித்த எழுத்துக்களில் போடப்படும் தலையங்கங்களுக்கு கீழ் தனித் தனியாக ஒன்றின் கீழ் ஒன்றாக எழுத வேண்டும், இவ்வாறு எழுதும் போது வாசகர்களுக்கு வாசிப்பதில் ஆர்வமும் கூடுதலாக ஏற்பட வாய்ப்புண்டு.

எனினும் இது இந் நூலாசிரியரின் முதல் முயற்சியாக இருப்பதனால் அடுத்த அடுத்த வெளியீடுகளில் இவர் இத் தவறுகளை திருத்தி மென்மேலும் பல சுகாதார அறிவுறுத்தல்களை எம் மக்களுக்கு வழங்குவார் என்பதில் திடமான நம்பிக்கையுண்டு, இன்று எம் மக்கள் மத்தியில் சுகாதார சம்பந்தமான நூல்கள் எமது மொழியில் வருவது மிக மிகக்குறைவு இதை நிவர்த்தி செய்வதற்கு ஒரு சில வைத்தியர்களின் முயற்சி மட்டும் போதாது இன்னும் பல வெளியீடுகளை தமிழ் மொழியில் எம் மக்களின் சுகாதார மேம்பாட்டிற்காக வெளியிட வேண்டும். இதற்கு அனைத்து மருத்துவர்களும் தங்களது வெளிப்பாடுகளை, ஆலோசனைகளை நூலுருவில் கொண்டு வருவதற்கு முன்வர வேண்டும்.

# பிறந்த நாள் வாழ்த்து



## செல்வி தவராசா தவராஜினி

புதியசெம்மணி வீதி ஆனந்தபுரம் கல்வியங்காட்டைச் சேர்ந்த தவராசா இந்திராணி தம்பதிகளின் அருந்தவப்புதல்வி செல்வி தவராஜினி தனது 4-வது பிறந்த தினத்தை 23-9-94 இன்று வெள்ளிக்கிழமை வெகு விமரிசையாக தனதில்லத்தில் கொண்டாடுகின்றார். தவராஜினியை அப்பா, அம்மா, தம்பி, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, தாத்தா மார், பாட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், அன்ரமார், அண்ணாமார், அக்காமார், மற்றும், உற்றார் உறவினர்கள் இறைவன் அருள்பெற்று சகல கலைகளும் கற்று நீடூழி காலம் வாழ்க எனவாழ்த்துகிறார்கள்.

புதிய செம்மணி வீதி,
ஆனந்தபுரம்,
கல்வியங்காடு.

சி. தவராசா
குடும்பத்தினர்.

(9488)

# வீடு விற்பனைக்கு

மந்திகை வைத்திய சாலையிலிருந்து சுமார் 100 யாரில் புலோலி தெற்கு பெருந்தெருவில் நவீன மாடி வீடு விற்பனைக்குண்டு. திரு த. உருத்திரா, ஆதவன் அரைக்கும் ஆலை மந்திகையுடன் தொடர்பு கொள்ளலாம்.

(9489)

# தனியார் தொழிற்பயிற்சிக் கல்லூரிகளின் ஒன்றியம் - யாழ் மாவட்டம்


மேற்படி ஒன்றியத்தில் பதிவு செய்யாத கணனி. தட்டெழுத்து, சுருக்கெழுத்து, தாதிகள் பயிற்சி, மனையியல், CIMA, AAT, IAB, தொழில் பயிற்சிகள் நடாத்தும் தொழில் பயிற்சி நிலையங்கள் 27-9-94 இலிருந்து 10-10-94 க்குள் மருத்துவ மனை வீதியில் உள்ள வட இலங்கை தொழில்நுட்ப கல்லூரியில் தம்மை பதிவு செய்து கொள்ளும்படி கேட்கப்படுகிறீர்கள்.

இக்கால எல்லைக்குள் பதிவு செய்யப்படாத நிலையங்கள் மேற்கொண்டு வகுப்புக்கள் நடத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

செயலாளர்
தனியார் தொழில்பயிற்சி கல்லூரி ஒன்றியம்

(சி-10389)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் மழலையாய்
27.12.1975

தாயகத்தின் விதையாய்
23.9.1991

மணலாற்றுச் சமரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

## வீரவேங்கை மலேசிம்மன்
### (இராசேந்திரம் தீபாகரன்)

தமிழை, தமிழ்மண்ணை தணலிலிட
சிலிர்த்து வந்த சிங்கப் படைகளை-
எதிர்த்து நின்ற புலிகளில் சிறுவனடா நீ
மணலாற்றில், நீ வீழ்ந்த நிலத்தில்
மலரும் பூக்களும் உன் வாசம் வீசும்!

மலேசிம்மனே ... ஆண்டுகள் மூன்றென்ன
ஆயிரம்தான் சென்றாலும் - உன்
நினைவுகள் எம்மை விட்டு அகலுமா ...?
சாந்தி! சாந்தி! சாந்தி!

மண்டான்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

இராசேந்திரம்
குடும்பத்தினர்

(9480)


# போட்டோ அல்பம் இனாம்

- கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்.
- போட்டோ பிளேற் (PHOTO PLATE) கலர் படங்களை கோப்பைகளில் பதித்தல். (சாம்பிள் பார்வையிடலாம்)
- கொம்யூட்டர் றபர்சீல் (COMPUTER RUBBER STAMPS) (இரண்டு வருட உத்தரவாதம்)
- லயின், காவ்ரோன், கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)
- புகைப்பட பிரதியாக்கம் (RE-COPY) மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

## ! கொழும்பு கலைக்கூடம் !

(கொழும்பு ஸ்ரூடியோ)

55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.

தொழில்நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்

(சி10219)

# கேணல் கிட்டு சிறுவர் பூங்காவில் ஒரு மாலைப் பொழுது

இயற்கையோடு இணைந்து விட்ட இன்பப் பூங்காவில் இளம் சிறார்கள் தமை மறந்து இன்புற்றிருப்பதைக் காணும்போது இதயம் பூரிக்கிறது என்கிறார் நடுத்தர வயதையுடைய ஒருவர்.

கேணல் கிட்டு சிறுவர் பூங்காவின் மையப் பகுதியில் அமைந்துள்ள ராட்டினத்தில் இருந்து பல சிறுவர்கள் வேகமாகச் சுழன்று கொண்டிருக்கின்றனர். அதனைப் பார்த்து ரசித்தபடி நின்ற அரச ஊழியரான அவரை அணுகி அவரது கருத்தை அறிய முற்பட்டபோது மேற்கண்டவாறு மனம் விட்டு பேசிய அவர் என் பிள்ளைகளைக் கூட்டி வந்து விளையாட விட்டு விட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் இயற்கை போன்று அமைந்து விட்ட இந்தப் பூங்காவை பார்த்து உண்மையிலேயே வியப்படைந்தேன் இந்தச்சிறிய பகுதியில் எவ்வளவு பிரமிப்பூட்டும் வகையில் அனைத்தையும் மிகவும் அழகாக உள்ளடக்கி அமைத்திருக்கிறார்கள். நல்ல முறையில் திட்டமிட்டு வடிவமைத்துள்ளதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

காலத்தின் தேவையை உணர்ந்து கேணல் கிட்டு நினைவாக இச்சிறுவர் பூங்காவை அமைத்துள்ளார்கள். பல வருடங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் போரினால் மனச்சோர்வடைந்த நிலையில் உற்சாகம் குன்றியவர்களாகக் காணப்படும் குழந்தைகளுக்கு ஒரு ஒளியேற்றும் இடமாக இப்பூங்கா திகழ்ந்து கொண்டிருக்கிறது என்றார்.

தன்னை மறந்து இயற்கையை ரசிப்பதுபோல் பலவர்ணப் பூக்களையும் பார்த்து லயித்துக்கொண்டிருந்த பெண்மணி ஒருவரை அணுகியபோது தன்னை ஒரு பாடசாலை ஆசிரியர் என அறிமுகப்படுத்திக் கொண்ட அவர் இற்றை வரை என் அடி மனதில் உறைந்து கிடந்த வேதனை இன்றுடன் அகன்று விட்டது. எமது பிள்ளைகள் வாழ்க்கையில் எதனையுமே அனுபவிக்க முடியாத துர்ப்பாக்கியசாலிகளாக வாழப்போகிறார்களே என என் மனதுக்குள் வேதனைப்படுவதோடு என்னுடன் நெருங்கிப் பழகுபவர்களுக்கும் அடிக்கடி கூறுவேன் அந்தக்கவலை இன்றுடன் தீர்ந்து விட்டது இவ்வளவு சீக்கிரம் எங்கள் குழந்தைகள் இன்பமாக தமது மாலைப்பொழுதைக் கழிக்க ஒரு சிறுவர் பூங்கா அமைக்கப்படும் என நான் கனவில் கூட நினைத்ததில்லை. எவ்வளவு அழகாக அமைத்திருக்கிறார்கள் சகல வயதினரையும் திருப்திப்படுத்தும்வகையில் சகல அம்சங்களையும் உள்ளடக்கி இப்பூங்கா அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கப்படக்கூடியதே. இந்தப்பச்சைப்பசேல் என வளர்ந்திருக்கும் புற்களைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் உள்ளதெனக்கூறிமகிழ்ந்தார்.

சாரம் அணிந்து தன் இருகைகளாலும் இரு சிறுவர்களின் கரங்களைப் பற்றியவாறு பூங்காவின் நடுவே நீண்டு வளைந்து வந்து கொண்டிருந்த பாதை வழியே பாதங்களைப் பதித்து வந்துகொண்டிருந்த சாதாரண குடும்பஸ்தரை அணுகினோம்.

தினமும் கூலி வேலைக்கு போகும் எனக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் தான் ஓய்வு கிடைக்கிறது. அன்றைய மாலைப் பொழுதை பிள்ளைகளுக்காக இங்கே செலவிடுகிறேன். மின்சாரமே தெரியாது வளர்ந்துவிட்ட பிள்ளைகள் இந்தப் பூங்காவில் தானே அதனைப் பல வர்ணங்களில் பார்த்து மகிழ்கிறார்கள். ஊஞ்சலில் ஆடி மகிழ்கிறார்கள். பிள்ளைகளின் சந்தோசத்திற்காக இதைத்தவிர வேறு எதைத்தான் என்னால் செய்ய முடியும்? இங்கு மற்றப்பிள்ளைகளுடன் சேர்ந்து என் பிள்ளைகளும் விளையாடுவதைப் பார்க்க உண்மையிலேயே மனதுக்கு சந்தோஷமாக இருக்கிறது எனக் கூறிவிட்டு ஊஞ்சலில் பிள்ளைகளை ஏற்றுவதற்காக நகர்ந்தார்.

போர்க்காலச் சூழலில் மழலைகள் உளப் பாதிப்புள்ளவர்களாக வளர்வதைத் தடுத்து உளப்பூரிப்புடன் எதிர்காலத்தை நோக்கி வீறுகொண்டு வளர்ந்திட கேணல் கிட்டு நினைவுச் சிறுவர் பூங்கா கைகொடுத்து நிற்கிறது. எமக்குகிடைத்த இச்சொத்தினைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது எங்கள் அனைவரது கடமையுமாகும்.

-பெற்றோர்-

சறுக்கீசில் சறுக்கி விளையாடிக் கொண்டிருந்த பள்ளிச் சிறுமி ஒருவரை அழைத்துக் கேட்டபோது 'இந்த சறுக்கீஸிலை சறுக்கி விளையாடுவதற்கும் ஐஸ்கிரீம் குடிப்பதற்கும் இங்கே வருவேன். இங்கு கூட்டி வருவதானால் கவனமாகப் படிக்க வேண்டும். அப்பதான் அப்பா இங்கே கூட்டி வருவார். பள்ளிக்கூடம் இல்லாதநாளில் அப்பா இங்கே கூட்டி வருவார் நான் வந்து ஊஞ்சல் ஆடுவேன், சறுக்கீஸ் விளையாடுவேன். மலையிலை அப்பாவின் கையைப் பிடித்தபடி ஏறி இறங்குவேன். தொங்கு பாலத்தில் ஏறும்போதுதான் பயமாக இருக்கும். அப்போ ஒரு கையை கயிற்றிலும் மறுகையை அப்பாவிலும் பிடித்துக் கொண்டு மெல்ல மெல்ல நடப்பேன்என்றார் சற்று அச்சத்துடன். உங்களுக்கு இங்கு என்ன பிடித்திருக்கிறது எனக் கேட்ட போது குகைக்குள் நல்ல வடிவான மீன்கள் ஓடுகின்றன. அதைப் பார்க்க ஆசையாக இருக்கிறது என்றார்.

சிறுமியுடன் கதைத்துக் கொண்டிருந்த போது வாயிலில் சீருடை அணிந்த சிறார்கள் சிலர் வந்து கொண்டிருந்தார்கள் பாலர்பாடசாலையைசேர்ந்த இவர்களை ஐந்து ஆசிரியைகள் அழைத்து வந்தனர் இவர்களிடம் பேச்சுக் கொடுத்த போது சிறுவர்களை புத்தகப் பூச்சிகளாக மட்டும் வளர்க்காது சில சமுதாய மாறுதல்களையும் புலப்படுத்துதல் வேண்டும் இப்படியான இயற்கை சூழலில் அவர்களை உலாவ விடும்போது மனதுக்குள் தாமாகவே பல புதிய சிந்தனைகளை தோற்றுவிப்பார்கள். அத்துடன் ஒவ்வொன்றைப்பற்றியும் ஆராய்ந்து அறிந்து கொள்ள முற்படுவார்கள் அவர்களது இத்தகைய முயற்சிகளுக்கு நாமும் பக்கபலமாக இருப்போம் மற்றைய பிள்ளைகள் ஒவ்வொன்றும் தாமாக ஏறி விளையாடுவதைப் பார்த்து இவர்களும் அவ்வாறே நடக்க முற்படுவார்கள். இத்தகைய சுற்றுலா இவர்களுக்கு ஒரு மாறுதலாக அமையும் என்றனர்.

குடும்பத்தினருடன் வந்திருந்தவர்களைக் கேட்ட போது இதற்குள் வந்தாலே நேரம் போவதுகூடத் தெரியவில்லை. வெள்ளைக்காரர் எவ்வளவோபணத்தைச் செலவு செய்து காலத்திற்குக்காலம் ஒவ்வொரு நாடாகச் சென்று இயற்கையை ரசிக்கிறார்கள். நாங்கள் அப்படி எல்லாம் செல்ல முடியுமா? இதுவரை எதுவுமே இல்லாதிருந்த எமக்கு இப்பூங்கா அமைக்கப்பட்டது ஒரு வரப்பிரசாதமாகவேயுள்ளது. மிகவும் அமைதியான வானுயர்ந்த மரங்களின் நடுவே பொருத்தமான இடத்தில் இப்பூங்கா அமைக்கப்பட்டு சிறந்த முறையில் பராமரிக்கப்படுவது வரவேற்கப்படவேண்டிய ஒன்றே. இது எங்களுக்கு கிடைத்த ஒரு பெரும் சொத்து இதனை பேணிப்பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையும் கூட.

இப்பூங்கா மேலும் சிறப்படைய ஒவ்வொருவரும் தங்களாலான உதவிகளையும் ஒத்தாசைகளையும் நல்குவார்கள் என எதிர்பார்க்கிறேன். இப்பூங்காவின் ஓர் பகுதியில் மிருகங்கள், பறவைகள் போன்றவை வளர்க்கப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படுமானால் இப்பூங்கா முழுமை பெற்றதாகி விடும். இங்கு நாம் வந்தவுடனேயே மனதுக்குள் இருக்கின்ற சஞ்சலங்கள் நீங்கி ஒரு விதமான நிறைவையடைகின்றோம் என்றனர்.

இறுதியாக இளைஞர் ஒருவரை சந்திக்க விரும்பினோம். கேணல் கிட்டுவின் உருவச்சிலையை உற்று நோக்கியவண்ணமிருந்தவரை தட்டிப் பேச்சுக்கொடுத்தோம்.

நீண்டகாலத்திற்குப்பின்பு இன்று கிட்டண்ணாவை நேரில் பார்த்தமாதிரியான ஓர் உணர்வு மனதில் தென்படுகிறது பொருத்தமான இடத்தில் அவர் கனவை நிறைவேற்றும் வகையில் இச்சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. அவரைச்சூழ அவரது குழந்தைகள் இன்று இங்கு மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்திக்கொண்டிருக்கின்றனர். அவர்களைப்பார்த்து கிட்டண்ணா கட்டளை பிறப்பித்துக் கொண்டு நிற்கிறார். பண்டைய காலத்தில் நல்லூரை ஆண்ட சங்கிலி மன்னன் பூங்காவின் முகப்பிலே குதிரை மீதிருந்து புன்னகை புரிகிறான். மத்தியிலே, குடாநாட்டை தன் பூரண கட்டுப்பாட்டிற்குள் நீண்டகாலமாக வைத்திருந்த கிட்டண்ணா நெஞ்சை நிமிர்த்தி நிற்கிறார் அவரைச்சூழ மாவீரர்கள் கம்பீரத்துடன் காவல் காத்து நிற்கின்றனர். இவர்கள் வீரத்தை பறை சாற்றும் வகையில் சிறிலங்கா இராணுவத்தினரிடம் கைப்பற்றப்பட்ட டாங்கி, உருக்குலைந்த நிலையில் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய வீர வரலாறு புதைந்துள்ள இந்த சிறுவர் பூங்காவைப் பார்வையிட தினமும் ஆயிரக்கணக்கானோர் பால் மற்றும் வயது வேறுபாடின்றி வந்து குவிவதில் ஆச்சரியம் இல்லையே என்றார்.

சந்திப்பு:- சசிகரன்

# தொலைதூர அண்டத்தில் தண்ணீர் கண்டுபிடிப்பு

நமது பூமியிலிருந்து இருபது கோடி ஒளி ஆண்டுகள் தொலைவிலுள்ள அண்டம் ஒன்றில் தண்ணீர் இருப்பதாக வானியல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர் பிரபஞ்சத்தின் வேறு பலபகுதிகளிலும் தண்ணீர் இருக்கக்கூடும் என்னும் நம்பிக்கையையும் இது தோற்றுவித்துள்ளது.

மீன ராசியிலுள்ள 'மார்க்காரியன்1' என்னும் அண்டத்தில் தண்ணீர் உள்ளதாக ரேடியோ டெலஸ்கோப் ஒன்றின் மூலம் ஆராய்ந்து விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். அமெரிக்காவின் மேரிலாந்த் பல்கலைக் கழகம், ஜேர்மனியில் பொன் நகரில் உள்ள மார்க்ஸ்பிளாங்க் வான் ஆராய்ச்சிக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த, விஞ்ஞானிகள் கூட்டாக ஆய்வு மேற்கொண்டு இந்தக் கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளனர்.

நமது பிரபஞ்சத்தில் மிகவும் தொலை தூரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தண்ணீர் ஆதாரம் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. நாம் வாழும் அண்டத்துக்கு வெளியே வேறு மூன்று இடங்களிலும் தண்ணீர் உள்ளதாகத் தெரிய வந்துள்ளதாகவும் அந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

'' மார்க்காரியன் 1'' அண்டத்தின் மையத்தில் வேகமாக சுழன்று கொண்டிருக்கும் மேகக் கூட்டத்தில் தண்ணீர் மூலக் கூறுகள் உள்ளனவாம். இந்த மூலக் கூறுகளிலிருந்து வெளியாகும் ரேடியோ அலைகளை ஜேர்மனியில் எட்பெல்ஸ்பர்க் என்னும் இடத்திலுள்ள மிகப் பெரிய அன்ரனா இனங் கண்டுள்ளது. இந்த அன்ரனா ஒரு கால்பந்துத் திடல் அளவுக்கும் பெரியதாகும்.

சாதாரணமாகத் தண்ணீரின் மின்காந்த சமிக்ஞைகள் பூமியிலுள்ள ரேடியோ டெலஸ்கோப்புகளினால் உணரப்படாத அளவுக்கு மிகவும் பலவீனமானவையாகும் ஆனால் '' மார்க்காரியன் 1'' அண்டத்தின் மையப் பகுதியிலிருந்து அளவிடற்கரிய ஆற்றல் பீறிட்டுப் பொங்குவதால், அங்கு கற்றை கற்றையாக ஆற்றல் மிக்க ரேடியோ சமிக்ஞைகள் வெளியாகின்றன. இந்தச் சமிக்ஞைக் கற்றைகளுக்கு 'மேசர்' என்று விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர்.

பூமியில் செயல்படுகின்ற 'லேசர்' ஒளிக் கற்றைகளைப் போல இந்த 'மேசர்' கற்றைகளும் செயலாற்றுகின்றன. ஆனால் லேசரில் ஒளி அலைகள் வெளியாகின்றன. மேசரில் றேடியோஅலைகள் வெளியாகின்றன. நாம்வாழும்அண்டத்தில் வெளியாகும் மேசர்களைக் காட்டிலும் 'மார்க்காரியன் 1' அண்டத்தில் வெளியாகும் மேசர் பத்து லட்சம் மடங்கு ஆற்றல் உள்ளது என்பதால் விஞ்ஞானிகள் இதற்கு 'மெகாமேசர்' என்று பெயரிட்டுள்ளனர். 'மார்க்காரியன்1' அண்டத்தில் மிகப்பெரிய கருந்துளை ஒன்று உள்ளதாக நம்பப்படுகிறது. அதனால் தான் அங்கே இந்த அளவுக்கு ஆற்றல் வெளியாகிறது.

இப்போதைய 'மெகாமேசர்' கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னதாகத் தண்ணீர் உள்ள வேறு ஐந்து 'மெகாமேசர்' களை விஞ்ஞானிகள் ஏற்கனவே கண்டறிந்தனர். ஆனால், அவை யாவுமே 'மார்க்காரி' யனைக்காட்டிலும் பூமிக்கு மிக அருகாமையிலேயே கண்டு பிடிக்கப்பட்டன. அன்றியும் கடந்த பத்து ஆண்டுகளில் எவையுமே கண்டு பிடிக்கப்படவில்லை.

இத்தகவல்களை மேரிலாந்து பல்கலைக்கழக ஆய்வு கூடத்தைச்சேர்ந்தவிஞ்ஞானி ஜேம்ஸ் பிராட்ஸ் தெரிவித்தார். ஒரு ''மெகாமேசர்'' கற்றையின் வழியில் பூமி குறுக்கிடும் போதுதான 'புற அண்டத் தண்ணீர் மூலக்கூறுக' ளைக் கண்டு பிடிக்கமுடியும் ஓர் அண்டத்திலிருந்து வெளியாகும்''மெகாமேசர்'' கற்றையானது பூமிக்கு அப்பால் நோக்கியிருக்குமானால், அந்த அண்டத்தின் ரேடியோ அலைகளைக் கண்டறிய முடியாது என்று அவர் கூறினார்.

''இப்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது போன்று மேலும் பல ''மெகாமேசர்கள் கண்டுபிடிக்கப்பட்டால், இது போன்ற ''மெகா மேசர்'' களில் என்ன உள்ளன? அவை எப்படி உருவாகின்றன? என்பன போன்ற விவரங்களை ஆராய்ந்து அறிய முடியும்'' என்று அவர் கூறினார்.

நாம் அறிந்த வரையில், தண்ணீர் பெருமளவுக்கு இருப்பது பூமியில் மட்டுமே என்றாலும் செவ்வாய்க்கிரகத்திலும் தண்ணீர் இருப்பதாக நம்பப்பட்டு வருகிறது. சூரியனுக்கு அருகில் இருக்கும் புதன் கிரகத்தின் துருவப்பகுதிகளில் உள்ள ஆழமான பள்ளத்தாக்குகளில் பனிக்கட்டிகளும் தண்ணீரும் இருப்பதாக கருதப்படுகிறது. தண்ணீரானது முதன்முதலில் விண்ணிலிருந்து வால் நட்சத்திரங்கள் மூலமே பூமிக்கு கொண்டு வரப்பட்டதாகச் சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

''தொலைதூர அண்டத்தில் தண்ணீர் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது மிகவும் பரபரப்பான செய்தி'' என்று ஜாக் வெல்ச் என்னும் விஞ்ஞானி தெரிவித்தார். இவர் பெர்க்லி நகரிலுள்ள கலிபோர்னியா பல்கலைக் கழக வானியல் ஆய்வுகூடத்தின் இயக்குநராவார். நமது அண்டத்திற்குள்ளேயே பிற இடங்களிலும் தண்ணீர் இருப்பது பற்றி 25 ஆண்டுகளுக்கு முன்னால் முதன்முதலாக கண்டு பிடித்த ஆய்வுக்குழுவில் இவரும் இடம் பெற்றிருந்தார். வேறு இடங்களிலும் தண்ணீர் உண்டு என்று அறியக்கிடைத்திருப்பது அங்கு உயிரினங்கள் உண்டு என்னும் சாத்தியக் கூற்றை அதிகரிக்கின்றது.

# 3 ஆம் ஆண்டில் வீறு நடை போடும்
## 23-9-94
# சேரன் பல் பொருள் வாணிபம்

ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், வியாபாரிகள்
அனைவருக்கும் அன்பு நன்றிகள்.

**மக்களின் மகிழ்ச்சி சேரனின் வளர்ச்சி**

## சேரன் பல்பொருள் வாணிபம்

அர்ச்சுனாசாலை, யாழ்ப்பாணம்.
கண்டி வீதி, சாவகச்சேரி.
கண்டி வீதி, கொடிகாமம்.
பிரதான வீதி, நெல்லியடி
பிரதான வீதி, பருத்தித்துறை
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்

சேரனின் பல்பொருள் வாணிப கூட்டில்
மக்களின் தேவையில்,....

சேரன் வேளாண் இடு பொருள் வாணிபம்
காங்கேசன் துறை வீதி, சுன்னாகம்.

யாழ்ப்பாணன் விற்பனை நிலையம்
அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

விக்ரர் இயந்திர உதிரிப்பொருள் வாணிபம்
அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

எழினி புடைவை வாணிபம்
லெப். கேணல் இராசன் சாலை, யாழ்ப்பாணம்

எழிற் கூடம்
அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

சேரன் மருந்து வாணிபம்
அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

சேரன் காகிதாதிகள் வாணிபம்
சந்தோசம் சாலை, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

தொடரும் ஆண்டுகளில் திறம்பட இயங்கி
உங்களுக்கு சிறப்பான பணி செய்திட
உங்கள் அன்பான வாழ்த்தினை வேண்டுகிறோம்.

(சி-10388)

# அடக்கி ஆள முற்பட்டமையே ஐ. தே. கவின் தோல்விக்கு காரணம்

## காமினி திசாநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களில் மக்களை அடக்கியாள முற்பட்டமையே, ஐ. தே. க. தோல்விக்குப் பிரதான காரணமாகும் என ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

மாத்தளையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் அவர் உரையாற்றுகையில் கடந்த ஆட்சியில் திறமையானவர்கள் நடுவீதிக்கு விரட்டப்பட்டார்கள் பொலிஸ் நிலையங்களிலும் நீதிமன்றங்களிலும் அரசியல் தலையீடு தாண்டவமாடியது

கடந்த பொதுத் தேர்தலில் நாம் நேரடியாக மக்களிடம் செல்லாது பொலிசார் மூலமும், உதவி அரசாங்க அதிபர்கள் மூலமும், சுவரொட்டிகளை ஒட்டச் செய்தோம் அவர்கள் மக்களிடம் சென்றார்களே தவிர நாம் செல்லவில்லை எனவும் தெரிவித்தார்.

## கூட்டம்

யாழ். மாவட்ட விவாக பிறப்பு இறப்பு பதிவாளர் சங்க வருடாந்தக் கூட்டம் எதிர் வரும் 27-ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9. 30 மணிக்கு சங்கத் தலைவர் திரு. செ. அன்னலிங்கம் தலைமையில் யாழ். காணிப் பதிவக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (யோ)

## ஒக்-19 புதிய கல்வியாண்டு

யாழ். பல்கலைக் கழக 1993/94-ம் கல்வி ஆண்டுக்கான கலைப்பீட முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஒக்டோர் 19-ம் திகதி ஆரம்பமாகும் என பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பரீட்சை அனுமதி அட்டை

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்கள சிற்றூழியரை பதவி உயர்த்துவதற்கான பரீட்சை வரும் 30-ம் திகதியும் முதலாம் திகதியும் யாழ். நகரில் நடைபெறவுள்ளது. இவர்களிற்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (88)

## சீமெந்தின் விலை ரூ. 275 கப்பல் கட்டணம் ரூ. 200

(கொழும்பு)

கொழும்பில் கூட்டுறவுச் சங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட சீமெந்துப்பை ஒன்றின் விலை 275 ரூபா என்றும் யாழ்ப்பாணத்திற்கு அதை கப்பலில் ஏற்றிவருவதற்கு 200 ரூபா கப்பல் கட்டணம் அறவிடப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் சங்கானை கூட்டுறவுச் சங்கத்தினால் கொழும்பிலிருந்து கப்பல் மூலமாக சீமெந்து ஏற்றிவரப்பட்டது: கப்பல் கட்டணம் அதிகம் அறவிடப்படுவதால் சீமெந்து அதிக விலைக்கு விநியோகிக்கும் நிலை உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சங்கானை கூட்டுறவுச் சங்கத்தினால் 800 சீமெந்துபைக் கற்றுக்கள் ஏற்றிவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவற்றை விநியோகிக்கும் வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. (தி)

## ராணுவ சிப்பாய் சடலமாக மீட்பு

தியத்தலாவ இராணுவ முகாமில் பயிற்சி பெற்றுவந்த இராணுவ சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இராணுவ பயிற்சி பெற்று வீட்டுக்கு வந்த சில தினங்களில் காணாமற்போன இவர் பின் காட்டுப் பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

## போட்டிப் பரீட்சை நடைபெறாது

நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த எழுதுநர் சேவைக்கும் அதனோடிணைந்த சேவைகளுக்கும் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை அத்தினத்தில் நடைபெறமாட்டாது என பரீட்சைத் திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறியப்பட்டதாக யாழ்ப்பாணம் வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் செல்வி பெரியதம்பி தெரிவிக்கின்றார். (88)

## சுகவீனம்

(வடமராட்சி)

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா, மாணிக்கவாசகர் அடுத்த வாரமளவில் யாழ். வருவாரென அறிய முடிகிறது அவருக்கு தற்போது சற்று சுகவீனம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் மருத்துவ சோதனை செய்து வருவதாகவும் மேலும் அறிய முடிகிறது.

தனது உடல் மருத்துவ சோதனையை முடித்துக் கொண்டு அடுத்த வாரம் வரவுள்ளார். (யோ)

## சட்டமூலம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலஞ்ச ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. வெளிநாட்டு வர்த்தக, நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இச்சட்டமூலத்தை சமர்ப்பித்தார்.

உள்நாட்டு இறைவரி திருத்தச் சட்டமூலமும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## பேக்கரிகளின் விபரம் சேகரிப்பு

வடக்கு-கிழக்கில் உள்ள பேக்கரிகளின் தொகையை திரட்டும்படி கூட்டுறவுச் சங்கங்களை கூட்டுறவு ஆணையாளர் கேட்டுள்ளார்.

ஒவ்வொரு கூட்டுறவுக்கிளை சார்ந்த பகுதிக்குள்ளும் உள்ள பேக்கரிகளின்தொகையை தனித்தனியாகத் திரட்டி அனுப்பி வைக்கும்படி அவர் கேட்டுள்ளார்.

கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் பேக்கரிகளுக்கு மாவை விநியோகம் செய்யும் நடவடிக்கைக்காகவே அவர் இவ்வாறு கேட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (தி)

## பரீட்சைகள் பிற்போடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவை போட்டிப்பரீட்சை, இலங்கை கல்வி நிர்வாக சேவைபோட்டிப் பரீட்சை, ஆசிரியர்களிற்கான போட்டிப் பரீட்சை, இலங்கை கல்வி நிர்வாக சேவை தடைகாண் பரீட்சை ஆகியன கால வரையறை இன்றி பிற் போடப்பட்டுள்ளது என கல்வித் திணைக்கள வட்டாரம் தெரிவிக்கின்றது. மேற்படி பரீட்சைகள் ஜனாதிபதி தேர்தலிற்கு பின்பே நடைபெறலாம் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (88), (பா)

## தனித்துறைகளாக இயங்க இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ராமநாதன் நுண்கலை மன்றத்தின் சங்கீதம், நடனம் ஆகிய கற்கை நெறிகளை தனித்தனித் துறைகளாக இயங்குவதற்கு பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பண்டிதரத்தினா கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இத்தகவலை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (பா)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-09-23

#### வெள்ளி இரவு

| | |
|---|---|
| 08.01 - | தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - ஈழதாசன் குழுவினர் தயாரித்து வழங்கும் 'தியாகதீபம் திலீபன்' வில்லிசை. |
| 08.20 - | லெப்ரினன்ட் கேணல் சந்திரன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - க. சிவராசா எழுதிய ''வன்னிக்கு வளம் சேர்த்தவன்'' |
| 08.30 - | செய்திகள் |
| 08-40 - | சுற்பிட்டிக் கடற்பரப்பில் போர்க்கப்பல் தகர்க்கப்பட்ட வீரசாதனையையொட்டி சிறப்பு நிகழ்ச்சி |

### 1994-09-24

#### சனி காலை

| | |
|---|---|
| 07.02 - | மாவீரவணக்கம் |
| 07.15 - | நீங்கள் கேட்டவை |
| 07-30 - | செய்திகள் |
| 07-35 - | பத்திரிகைச் செய்திகள் |
| 07.40 - | தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7-ம்ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி குலேந்திரன் எழுதிய ''தமிழீழப் பயணத்தில் திலீபன்'' |

## காஸ்ட்ரோவின்

பொறுக்காத அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஐசனோவரும் சி. ஐ. ஏ. தலைமை அதிகாரியான ஆலனும், பல நடவடிக்கைகளை எடுத்தனர். கென்னடி ஜனாதிபதியான பின்னரும் இந்நடவடிக்கைகள் தொடர்ந்தன.

இதன் ஒருகட்டமாக 1961 ஏப்ரல் 17-ந் திகதி பிளாயா ஜிரோனில் பிக்ஸ் வளைகுடா பகுதி மீது அமெரிக்கப் படைகள் படையெடுத்தன. நாட்டிற்காக தம்மை அர்ப்பணித்துப் போராடிய கியூபாவின் விடுதலைப் படையினர் முன் ஏகாதிபத்தியத்தால் எதுவும் செய்ய முடியாத நிலையில், 1200 பேர் சரணடைந்து தோல்வி கண்டது. அமெரிக்கா இதையடுத்து சி. ஐ. ஏ யின் தலைவரான ஆலன் கென்னடியால் உடனடியாகப் பதவி நீக்கப்பட்டார்.

அமெரிக்கா எந்தெந்த வகைகளில் கியூபாவை நசுக்க முடியுமோ அந்த வகைகளில் செயற்பட்டு மூக்குடைபடுவது வழமையாகியது. ஏர்னஸ்டோ சேகுவேரா 1964 டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் பகிரங்கமாகவே புள்ளிவிபரங்களுடன் அமெரிக்காவை சாடினார். அவ்வாண்டின்முதல் பதினொருமாதங்களில் மட்டும் 1323 ஆட்சிகவிழ்ப்பு மற்றும் ஆத்திரமூட்டும் செயல்களில் அமெரிக்கா இறங்கியதாக அவர் குற்றஞ்சாட்டினார். கியூபாவின் மக்களின் பேராதரவு இருக்கும் வரை காஸ்ட்ரோவைத் தொடக்கூட முடியாதென்பதை அமெரிக்கா புரிந்து கொண்டும்அது தன்செயற்பாடுகளை நிறுத்தவில்லை. கியூபாவுக்கு ஆதரவானலத்தீன் அமெரிக்க நாடுகளை தனது பொருளாதார வலிமையைக் காட்டிப் பயமுறுத்தியது அமெரிக்கா. ஆயினும் அமெரிக்கா கியூபாவைத் தாக்கும்போதெல்லாம் சோவியத்யூனியன் உற்ற நண்பனாக கியூபாவை அரவணைத்தது.

காஸ்ட்ரோ உள்நாட்டிலும் பல சவால்களை எதிர்கொள்ளவேண்டி இருந்தது. அமெரிக்கா என்றால் சிம்மசொப்பனமாகக் கருதிய மக்களுக்கு உண்மை நிலையை உணர வைக்க காஸ்ட்ரோ பெரிதும் போராட வேண்டியிருந்தது. இதற்கு மேலாக காஸ்ட்ரோவின் உறுதியான நண்பனாகவிருந்த சேகுவேரா 1965 மார்ச் 15இல் பொலிவியநாட்டின் விடுதலைக்காக போராடுவதற்காக காஸ்ட்ரோவிடமிருந்து விடைபெற்றுச் சென்றார்.

காஸ்ட்ரோ என்ற தனிநபரின் அயராத முயற்சி கியூபாவை ஒவ்வொரு கட்டத்திலும் வளர்த்தெடுத்தது. என்றுமே தளராத அந்த இரும்பு மனிதனின் உறுதி அமெரிக்காவை என்றுமே கியூபா விடயத்தில் தோல்வியையே காணச் செய்தது.

பொலிவியாவுக்குச் சென்ற சேகுவேராவைக் கூட சி.ஐ.ஏ விட்டுவைக்கவில்லை. 1967 ஒக்டோபர் 9 இல் அந்த விடுதலைப் போராளி யுத்த தர்மங்களையும் மீறிய வகையில் சுட்டுக் கொல்லப்பட்டார். காஸ்ட்ரோவின் தோளோடு தோள் நின்று போராடிய சேகுவேராவின், நாளேட்டைகைப்பற்றிய சி.ஐ.ஏ அதன் மூலம் தன் பொய்ப் பிரசார நாடகத்தை அரங்கேற்ற முனைந்தது. சேகுவேராவை கீழ்த்தரமாக சித்திரித்துக் காட்டும் வகையில் அந்த நாளேட்டைப் பயன்படுத்த எண்ணியது சி.ஐ.ஏ ஆனால் நேர்மையை விரும்பிய பொலிவியா உள்நாட்டுமந்திரியால், நாளேட்டின் பக்கங்களின் புகைப்படப் பிரதிகள் பிடல் காஸ்ட்ரோவுக்கு இரகசியமாக அனுப்பப்பட்டன. சி.ஐ.ஏ தன் செயலை அரங்கேற்றுமுன், ''பொலிவியாவில் சேயின் நாளேடு'' என்ற தலைப்பில் கியூபா வெளியிட்ட புத்தகம் உண்மையை உலகுக்குரைத்தது.

கரும்பை பிரதான உற்பத்திப் பொருளாக கியூபாவின் பொருளாதாரம் பெருமளவில் சோவியத்யூனியனையே சார்ந்திருந்தது. விவசாய உற்பத்திப் பொருள்களோ, உணவுத் தேவையோ, எண்ணெயோசோவியத்யூனியனின் உதவிகள் கியூபாவுக்கு பெருந்துணையாக இருந்தன.

சோவியத்யூனியன் சிதறுண்டு போகவும் கியூபாவின் பொருளாதாரம் பெருமளவு ஆட்டம் கண்டது உண்மை. அமெரிக்கா, கியூபாவுக்கென வரும் எந்த ஒரு கப்பலையும் தன் துறைமுகங்களில் தங்கிச் செல்ல அனுமதிப்பதில்லை. சர்வதேச அளவில் சோவியத் யூனியனின் சிதைவு, அமெரிக்கா கியூபாவுக்கெதிராகமேற்கொள்ளும் தடைகளை தட்டிக் கேட்க ஆளில்லாமல் செய்தது.

30 வருடங்களுக்கு முன் ஒருதொன் கரும்பின் பெறுமதி, எட்டுத்தொன் எண்ணெய்க்குச் சமனாக இருந்தது. ஆனால் இன்று ஒரு தொன் எண்ணெய்க்கே ஒரு தொன் கரும்பின் பெறுமதி இறங்கியுள்ளது இவையெல்லாம் கியூபாவின் நிலையை அசைத்துப் பார்க்கின்றன. 31 வருடகால அமெரிக்காவின் வர்த்தகத் தடை கியூபாவை, தன்கையே தனக்குதவி என்ற நிலைக்கு கொண்டு சென்றிருக்கிறது.

சோசலிஸம் அல்லது மரணம் என்ற தலைப்பில் ஹவானாவின் தெருக்களில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் இன்னும் கியூபாவை உணர்வுகளின் உச்ச நிலைக்கு கொண்டு சென்றுள்ளன அமெரிக்காவும் அதன் கூட்டணி ஏகாதிபத்தியங்களும் எத்தகைய பொருளாதாரத் தடையை விதித்தாலும் கியூபா மாறப்போவதில்லை என்பதை கியூபா மக்களின் அன்றாட வாழ்க்கை இன்னும் காட்டிக் கொண்டேயுள்ளது.

தொலைதூர இடங்களுக்கான பஸ்சேவை குறைக்கப்பட்டுள்ளதால், அருகில் உள்ள பாடசாலைகளில் பிள்ளைகள் கல்வி கற்கிறார்கள் எண்ணெய்த் தட்டுப்பாட்டால் கராஜ்களுக்குள் கார்கள் சென்றாலும், வீதிகளில் ஓடித்திரியும் சைக்கிள்கள் அம்மண்ணை உயர்த்தி வைத்துள்ளன.

1980களைப் போல இந்த ஆண்டிலும் கியூபா மக்கள் சிலர் சொந்த மண்ணின் வாசனை மறந்து அமெரிக்காவுக்குள் சென்றுகொண்டிருக்கிறார்கள் புளோரிடா நோக்கிச் செல்லும் ஆயிரக்கணக்கானோர் கட்டு மரங்களிலும், வீடுகள் செய்யும் உடையக்கூடிய மரங்களினால் ஆன படகுகளிலும் பிள்ளைகளையும், கைக்குழந்தைகளையும் அழைத்துச் செல்கின்றனர் இதனால் ஒரு தொகையானோர் மாண்டும் உள்ளனர்.

பிள்ளைகளுடன் பாதுகாப்பு படகுகளிலும், கட்டு மரங்களிலும் கியூபாவைவிட்டு வெளியேறுபவர்களை தடுத்து நிறுத்தும்படி காஸ்ட்ரோ கடலோரக் காவல் படையினருக்கு உத்தரவிட்டுள்ளார் படகுப் பிரயாணிகளின் கஷ்டநிலை குறித்தும் குழந்தைகளை இவ் ஆபத்துப் பயணத்தில் ஈடுபடுத்தவேண்டாம்என காஸ்ரோ கவலையோடு கேட்டுள்ளார்

அமெரிக்காஅகதிகளை ஏற்க மாட்டோம் எனக் கூறினாலும் குறிப்பிட்ட தொகையினருக்கு விசா வழங்க ஆயத்தமாகியிருப்பதாக இப்போது அறிவித்துள்ளது. அமெரிக்கா, அகதிகள் விடயத்திலும் கியூபாவை நெருக்குவதற்கு என்றுமே தயங்காது என்பது வெளிப்படையானது.

எனினும். ஹவானாவின் அமெரிக்க தொடர்பு நிலையத்தின் முன் கியூபா மக்கள் குழுமி நின்று, ''நாங்கள் உங்களுக்கு என்றும் பயப்படபோவதில்லை மிஸ்டர் யான்கி'' என உரத்த குரலில் அமெரிக்க இராஜதந்திரிக்கு இவர்கள் எழுப்பும்குரல் காஸ்ட்ரோவின் தலைமையில் கியூபா என்றும் உணர்வுள்ள சுயமரியாதை கொண்ட நாடாகவே இருக்கும் என்பதை இனங்காட்டி நிற்கின்றது.

## புலிகளுடன்

வித்தார்

மேலும் அவர்களின் பெயர் விபரங்கள் விரைவில் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர், இனிமேல் படையினர் தாக்குதல் குறித்து விழிப்பாக இருப்பர் எனவும். அவ்வாறு செய்யப்படுவதினால் அரசாங்கம் சமாதான முயற்சிகளைக் கைவிடும் எனக் கூறுவதற்கில்லை எனவும் தெரிவித்தார், தாக்குதல் நடைபெற்ற போதும் விரைவில் இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இனப்பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதே வேளை, அரசாங்க சார்புக் குழு புலிகளுடன் பேச்சுவார்த்தைநடத்த விரைவில் அதாவது அடுத்த வாரமே யாழ்ப்பாணம் செல்லலாம் என பி பி ஸி, தெரிவித்தது

## தியாகி

புனரமைப்பும் இடம் பெறுகின்றன.

நினைவுப்பந்தல்களில் வைக்கப்பட்டுள்ள திலீபனின் உருவப்படத்திற்கு மக்கள் எழுச்சியுணர்வுடன் சென்று, மலர் சொரிந்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

எல்லாக் கோட்டங்களிலும் மாணவர்கள், ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள், உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டு திலீபனின் தியாகத்தை நினைவு கூருகின்றனர்.

(தி,86)

## மக்களை

ளின் விபரம் வருமாறு:

- ★ ரி 81 ரகதுப்பாக்கி -01
- ★ ரி56-1ரக துப்பாக்கி -02
- ★ ரி56 ரவைக்கூடு -04
- ★ ரி-81 ரவைக்கூடு -04
- ★ நடுத்தர ரவைகள் -390
- ★ ஏ. கே. கோல்சர் -02
- ★ எம் 75 ரக குண்டு -02

## தீர்வு குறித்து ஆராய்வு

இனப்பிரச்சினைக்கான அரசின் முயற்சிகள் தொடர்பாக அரசாங்க பாராளுமன்ற குழு உறுப்பினர்களுடனும், பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சித் தலைவர்களுடனும் கலந்தாலோசித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கடற்படை

சேர்ந்த யோசேப் பெரியராசு (வயது 50) என்னும் மீனவரே காணாமல் போனவராவார். நேற்று மாலை 6மணி வரை திரும்பி வரவில்லை.

இவர்களது வள்ளமும் மீன் வலைகளும் கடற்படையினரால் நிர்மூலமாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(21)

## பிரதமர்

திறைசேரியை வெறுமையாக்கிவிட்டு சென்றுள்ளதாகவும், இதனால் நாட்டில் மக்களுக்கு பல நிவாரணங்களையும, வடக்கு - கிழக்கில் பாரியளவு புனரமைப்பு திட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் இதற்கு பாரியளவு நிதி தேவைப்படுவதாலேயே இவர் இப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் இதற்கான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளாது இப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரியவருகிறது.

## மன்னார்

செல்வதாகவும், ஆயுதம் தாங்கிய வேகப்படகுகளில் அவர்கள் பயணம் செய்வதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## ஐ. தே. கவின்

கடந்த ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் சகல அரச ஊழியர்களுக்கும் சம்பளவுயர்வு வழங்குவதென்ற ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அரசின் அறிவிப்பை பொது நிர்வாக அமைச்சு சகல அரச அலுவலகங்களுக்கும் அறிவித்திருந்தது இதன் படியே தற்சமயம் சம்பளம் அரச ஊழியர்களுக்குவழங்கப் படவுள்ளது.

இந்நடைமுறையையாழ்மாவட்டத்தில் மேற்கொள்வதற்கான அனுமதியும் கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (பா, தி)


# A/L 95 DAY CLASSES

(பகல்நேர வகுப்புக்கள்)
கலை - வர்த்தக பிரிவுக்கு உரிய சகல பாடங்களும்

ஆரம்பம் 27- 9- 94
(செவ்வாய் காலை8மணி)

புதிய உயர் கல்லூரி
New College of High Studies

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி/10390)


மாணவரமைப்பு மகளிர் பிரிவு நடத்திய

# திலீபன் நினைவுப் போட்டி பரிசு பெற்றோர் விபரம்

விடுதலைப்புலிகள்மாணவர் அமைப்பு மகளிர் பிரிவினரால் தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவையொட்டி நடத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் யாழ்.மாவட்ட மட்டத்திலானமுடிவுகள் வெளிவந்துள்ளன. இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 25-ம் திகதி காலை 10.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில்வழங்கப்படவுள்ளன.

இப் போட்டிகளில் பரிசில் பெற்றோர் விபரம் வருமாறு;

கீழ்ப்பிரிவு; கட்டுரைமுதலாமிடம் செல்வி காத்தியா ஞானசோதியன். ஆண்டு 4 நல்லூர் சென்பெனடிக்ற் றோ.க த.க. பாடசாலை, இரண்டாம் இடம் ச. கமலதாஸ், ஆண்டு-5 கோண்டாவில் ராமகிருஷ்ண மகாவித்தியாலயம், மூன்றாம் இடம் ஞானலிங்கம் ஆதவன் ஆண்டு 4 அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி. கவிதை முதலாம் இடம், ஞானலிங்கம் ஆதவன், ஆண்டு4 அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி ,செபஸ்ரியான்தர்சினி ஆண்டு 2 ஒ எல் ஆர். புனித அடைக்கல மாதா பாடசாலை, மூன்றாம் இடம் ஆ. சுகன்யா ஆண்டு-5, திருக்குடும்ப கன்னியர் மடம்.

மத்தியபிரிவு: கட்டுரை முதலாம் இடம் வி தவக்குமார், ஆண்டு 7, காந்தரூபன் அறிவுச் சோலை, இரண்டாம் இடம் நவரத்தினம் மகேஸ்வரன், ஆண்டு-11, யா-இந்துக் கல்லூரி, மூன்றாம்இடம் க. மதனமெளலி, ஆண்டு11, புனித ஹென்றியரசர் கல்லூரி, கவிதை முதலாம்இடம் மகேந்திரராசா பிரவீணன் ஆண்டு-9, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, இரண்டாம் இடம் க. மதனமெளலி, ஆண்டு-11, புனித ஹென்றியரசர் கல்லூரி, மூன்றாம் இடம் மெல்வின் றொயின் ஆண்டு-9 புனித அந்தோனியார் கல்லூரி

சிறுகதை முதலாமிடம் வி. கமில்ரன், ஆண்டு 7, கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், இரண்டாம் இடம் நவரத்தினம் மகஸ்வரன், ஆண்டு 11 யா/ இந்துக்கல்லூரி, மூன்றாம் இடம் மகேந்திரராஜா பிரவீணன், ஆண்டு 9. தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

மேற்பிரிவு கட்டுரை முதலாம் இடம் அமுதினி அம்பிகைபாலன் ஆண்டு 12 வேம்படி மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம் த. கெங்காதரன் க பொ. த. (உ/த) வர்த்தகம் 1996, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம். மூன்றாம் இடம் யு. ஜேம்ஸ் றஜீவன், ஆண்டு 13 கொக்குவில இந்துக் கல்லூரி கவிதை முதலாம் இடம் சிவானி சிறீஸ்கந்தராஜா க பொ. த. (உயர்தரம்) 1994,யா/ இந்து மகளிர் கல்லூரி. இரண்டாம் இடம் இரத்தினசிங்கம் விஜே க.பொ த.(உயர்தரம்)1996, நடேஸ்வரா கல்லூரி, மூன்றாம் இடம் சந்திரலிங்கம் கெங்கராஜன் க. பொ. த. (உயர்தரம்)1996 அச்சுவேலி மகாவித்தியாலயம், சிறுகதை முதலாம் இடம் குணாளினி சதாசிவ மூர்த்தி ஆண்டு 13 சாவகச்சேரி இந்துக்கல்லூரி இரண்டாம் இடம் பிரேமினி சபாரத்தினம் ஆண்டு 13 சாவகச்சேரி இந்துக் கல்லூரி மூன்றாம் இடம் ஆனந்தி சதாசிவமூர்த்தி ஆண்டு 13, சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

# தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரத நிகழ்வுகள்

தியாகி லெப் கேணல் திலீபன் நினைவாக வட்ட ரீதியாக நடைபெற்று வரும் உண்ணா விரத நிகழ்வுகள் இன்று காலை 7 00 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.

இந்நிகழ்வுகள் வலிகாமம் கோட்டத்தில் உடுவில் வட்டம் சுன்னாகம் சிவன் கோவிலடியில், ஏழாலை கலைமகள் ச. ச. நிலையம், மத்திய ச. ச. நிலையம், டெனின் ச. ச நிலையம். என்பனவும், சங்கானை வட்டம் வடக்கம்பரை அம்மன் கோவிலடியில், சுழிபுரம் சிற்றூர் மக்களும், சண்டிலிப்பாய் வட்டம் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவிலடியில் மானிப்பாய் வர்த்தகர் சங்கம், நவாலி சிற்றூர் மக்களும், கோப்பாய் வட்டம் நீர்வேலி கந்தசுவாமி கோவிலடியில் புத்தூர் மெ. மி. த. க. பாடசாலை, அச்சுவேலி மகா வித்தியாலயம், சரஸ்வதி வித்தியாலயம், சிறி விபரி வித்தியாலயம், முரளி தையல் நிலையம், உற்பத்திக்குழு, ஆவரங்கால் ச. ச, நிலையங்கள் என்பனவும், யாழ்,, நல்லூர் வட்டம், நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில், தனியார் போக்குவரத்து சேவைகளின் ஒன்றியமும் கலந்து கொள்ளவுள்ளன.

தீவகக் கோட்டம் அரியாலை நாச்சிமார் கோவிலடியில், சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம், புங்குடுதீவு சித்தி விநாயகர் வித்தியாலயம், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், மயூரன் குடியிருப்பு ஆகியன கலந்து கொள்ளவுள்ளன.

தென்மராட்சி கோட்டத்தில் கைதடி வட்டம் கைதடிச் சந்தியில், ஸ்ரீ முருகன் ச. ச. நிலையம், கைதடி, கைதடி மேற்கு ச ச. நிலையம் என்பனவும், சாவகச்சேரி வட்டம் மணங்குணாப் பிள்ளையார் கோவிலடியில், மட்டுவில், நுணாவில், கல்வயல், நுணாவில் வகுப்புத் தொழிலாளர் சங்கமும், கொடிகாமம் வட்டம் 190 ஆம் கட்டை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில், வடவரணி சிமிள் அம்மன் கோயிலடி, செல்வா ச. ச. நிலையம் என்பனவும், பளை வட்டம் இரட்டைக்கேணி அம்மன் கோவிலடியில் தர்மக்கேணி மக்கள், வாகன சங்கம் என்பனவும் கலந்து கொள்ளவுள்ளன.

வடமராட்சி கோட்டம் பருத்தித்துறை வட்டம் மந்திகை அம்மன் கோவிலடியில் இலங்கை போக்குவரத்துச் சபை, பருத்தித்துறைச் சாலை ஊழியர்களும் கரவெட்டி வட்டம் துன்னாலை கலிகைக் கந்தசுவாமி கோவிலடியில் தேவரையாளி இந்துக்கல்லூரி, அரசடி அ. த. க பாடசாலை என்பனவும், உடுப்பிட்டி வட்டத்தில் நாவலடி வைரவர் கோவிலடியில் சர்வோதயம் முதலைக்குழி, இளங்கோ ச. ச. நிலையம். முருக மூர்த்தி ச. ச. நிலையம்- சோழங்கன் ச. ச. நிலையம் மகாகவி ச. ச. நிலையம்: வல்வெட்டி இ, த. க. பாடசாலை என்பனவும் கலந்து கொள்ளவுள்ளன.

கடற்புலிகள் பிரதேசங்களில் சுழிபுரம் சிறி கணேசா ச. ச. நிலைய முன்றலிலும் அரியாலை கிழக்கு நித்திலா பாடசாலையிலும் உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.


## 140-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



| தாய் மடியில் | தாயக விடிவில் |
|---|---|
| 19 — 04 — 1978 | 1994 — 05 — 07 |

### 2-ம் லெப். செல்வக்குமரன் / பல்லவன்
### செல்லத்துரை நந்தகுமார்

சீறி வரும் பகைவனை கூறுபோட்டு
வீறு கொண்ட வேங்கையாய்
தமிழீழமதே தாரக மந்திரமாய்
பேரோடு புகழ் பூத்து வித்தானாய்
நிலைத்தாய் நெஞ்சமெலாம்.

இன்று (23-09-94) எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வில் கலந்துகொள்ளும்படி சக போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

- குடும்பத்தினர்

(9496)

## 7-ம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
16-02-1955

மண்ணுக்காய்
23-09-1987

### சவரிப்பிள்ளை
### யோகரெட்ணம் (யோகன்]

பாரத படைக்கெதிராக திலீபன் நடத்திய
தியாக வேள்விக்கு ஆதரவளித்து
மன்னார் பட்டித்தோட்டத்தில் நடந்த
ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் யோகனை
இழந்தோம்.

யோகா உன்னை இழந்தோம்
உனது உணர்வுகளை நாம் இழக்கவில்லை.
மலரும் தமிழீழத்தில் உனது நாமம்
என்றும் நிலைக்கும்.

குடும்பத்தினர்
இத்திக்கண்டல்
அடம்பன் - மன்னார்

(9491)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.